இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK SINCE 1909 JAPAN

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO
Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 233 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(16.05.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 25, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

Special offer
2023 மே 1 தொடக்கம் மே 31 வரை

KDK SINCE 1909 JAPAN

DISCOUNT 15% (On selected models only) Cash or Card *Conditions apply

Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO
Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# ஜனாதிபதித் தேர்தலை விரைவில் நடத்துங்கள்!

## முடிந்த ஒத்துழைப்பை வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிவிப்பு



02பக்கம்

## மக்களின் ஆணையின் மூலம் மஹிந்த பதவிக்கு வருவார்!

### மார்தட்டுகிறார் நாமல் எம்.பி.



தலைமைப் பொறுப்பிலிருந்து விடை கொடுத்தபோது மக்களுடன் இருந்த மஹிந்த, மக்களின் ஆணையின் அடிப்படையில் மட்டுமே மீண்டும் பதவிக்கு வருவார் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது, மஹிந்த பிரதமராக பதவியேற்றுக்கொள்வார். இதனால் கலகம் ஏற்படும் என்ற அடிப்படையில் கொழும்பில் கூடுதல் பாதுகாப்பு... 02 பக்கம்

## ஆளுநர்களை பதவியிலிருந்து அதிரடியாக நீக்கினார் ரணில்

வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் ஆளுநர்கள் ஜனாதிபதியினால் நேற்று (15) பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், புதிய ஆளுநர்கள் நாளை புதன்கிழமை (17) நியமிக்கப்படவுள்ளனர்.

ஜனாதிபதி செயலகம் நேற்று இதனை அறிவித்துள்ளது.

## சீனி, பால் மா விலைகளை குறைத்தது லங்கா சதொச




லங்கா சதொச நிறுவனம் இரண்டு நுகர்வுப் பொருட்களின் விலையை குறைத்துள்ளது.

அதன்படி, 6 ரூபாவால் குறைக்கப் பட்ட ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனியை இனி 243 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய முடியும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 400 கிராம் பால் மா பக்கெட் ஒன்றின் விலை 60 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,080 ரூபாவாகும்.

## பாடசாலை மாணவர்களுக்கு 1000 மெட்ரிக் தொன் அரிசி

### இலங்கைக்கு வழங்கியது தாய்வான்




02பக்கம்

## வெளியில் நன்றாகத் தெரிந்தாலும் சஜித்தின் உள்ளே ஒன்றுமில்லை!

### ஐ.தே.கவுக்கு தாவிய ஹரிசன் விளாசல்



ஐக்கிய மக்கள் சக்தியின் பாதிப் பேர் வெகு விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பார்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி.ஹரிசன் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

சஜித் பிரேமதாச வெளியில் நன்றாகத் தெரிகிறார். ஆனால், உள்ளே எதுவுமில்லை. அவருடன் முன்னோக்கிச் செல்வதற்கு வழியில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பயணத்துக்கு எனது ஆதரவைத் தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தியின் சகல பதவிகளையும் இராஜினாமா செய்கிறேன்.

நான் 13 வருடங்களுக்கு மேலாக அநுராதபுரம் மேற்கு தொகுதி அமைப் பாளராக... 02 பக்கம்

## நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மூன்றாவது அலகு 100 நாட்களுக்கு மூடல்

### அமைச்சர் காஞ்சன விஜேசேகர



நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின் உற்பத்தி இயந்திரம் எதிர்வரும் ஜூன் மாதம் 13ஆம் திகதி முதல் 100 நாட்களுக்கு மூடப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர்... 02 பக்கம்

## தேர்தலை நடத்தாமல் இருப்பது தவறானது

### சுமந்திரன் எம்.பி. வவுனியாவில் தெரிவிப்பு



- வவுனியா நிருபர் திவியா -

''தேர்தல் முறையில் சீர்திருத்தம் செய்வது நல்ல விடயம். ஆனால், சீர்திருத்தம் இன்னும் செய்யவில்லை என்ற காரணத்துக்காக... 02 பக்கம்

## உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் வழக்கு

### இப்ராஹிமின் ஆட்சேபனை நிராகரிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படும் என்ற தகவலை மறைத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள தொழிலதிபர் மொஹமட் இப்ராஹிம் மற்றும் அவரது இரு மகன்களுக்கு எதிராக சட்ட மா அதிபர் தாக்கல் செய்த வழக்கை விசாரிக்க முடியாது என முன்வைக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனையை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. 02 பக்கம்

## சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க கடுமையான சட்டத்தை உருவாக்குக

### சட்டத்துறையினருக்கு ஜனாதிபதி ரணில் பணிப்புரை



சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க கடுமையான சட்டத்தை உருவாக்குமாறு சட்டத்துறையினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஒரு சில ஆசிரியர்கள், முதியவர்கள் மற்றும் சமூகத்தின் பல்வேறு தரப்பினரால் தொடர்ச்சியாக இடம் பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களை விரைவாக தடுக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவ்வாறான செயல்களுக்கு கடுமையான தண்டனை வழங்கும் சட்டக் கட்டமைப்பு ஒன்றின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார். களுத்துறை ஹோட்டல் ஒன்றின் மேல் மாடியில் இருந்து குதித்து... 02 பக்கம்

## இலங்கையின் பொருளாதாரம் 2024இல் மீளெழும்

### சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை

-நா.தினுஷா-

இலங்கையின் பொருளாதாரம் தற்போது 3 சதவீதத்தால் சுருங்கி காணப்படும் என்பதுடன், எதிர்வரும் 2024ஆம் ஆண்டில் நாட்டில் பொருளாதாரம் 1.5 சதவீதத்தால் எழுச்சியை சந்திக்கும் என சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடு தொடர்பான கலந்துரையாடல்கள் எதிர்வரும்... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...

கிட்டடியில நடக்குமெண்டு அறிவிச்ச உள்ளூராட்சி மன்ற தேர்தலை விட்டுப்போட்டு எப்ப நடக்குமெண்டே தெரியாத ஜனாதிபதித் தேர்தலைப் பற்றிப் பேசுறார் சஜித் ஐயா..!



## யாழ். இளைஞன் டுபாயில் படுகொலை:

### அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்ட தாயார்!




யாழ்ப்பாணம், சுண்டுக்குளிப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய கமலதாஸ் நிலக்ஷன் என்பவர் கடந்த 2023 ஏப்ரல் 27ஆம் திகதி டுபாயில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரது சடலத்தை நாட்டுக்கு கொண்டு வர முடியாத சூழ்நிலை உள்ளதால், சடலத்தை நாட்டுக்கு கொண்டு வருவதற்காக சம்பந்தப் பட்டோருக்கு கோரிக்கை விடுக்கும் முகமாக அவரது தாயார் நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பு ஒன்றை... 02 பக்கம்

## களுத்துறை 16 வயது மாணவியின் உறவினர்கள் மௌனப் போராட்டம்



களுத்துறை, ஹோட்டல் ஒன்றின் ஐந்தாம் மாடியிலிருந்து 16 வயது மாணவி ஒருவர் விழுந்து உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் நால்வரும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று (15) காலை களுத்துறை நீதிவான் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த பாடசாலை மாணவியை விடுதிக்கு அழைத்து வந்த அவரது 19 வயதான தோழி, தோழியின் காதலன், விடுதி உரிமையாளரின் மனைவி மற்றும் பிரதான சந்தேக நபரின் சாரதி ஆகியோர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். 02 பக்கம்

### உஷ்



ஆளுநர்மாரை பதவிகளில் இருந்து நீக்க ஜனாதிபதி ரணில் மேற்கொண்ட தீர்மானத்தை ஆளுநர்மார் பலர் ஏற்கவில்லையாம். அதனால் பதவிகளைவிட்டு செல்வதில்லையென்று அவர்கள் தீர்மானித்திருந்தனர்.

இதனை அறிந்த ரணில், அவர்கள் விலகாவிட்டால் பரவாயில்லை. நான் அவர்களை நீக்குகிறேன் என்று கூறி அதிரடியாக தீர்மானம் எடுத்து அவர்களை நீக்கி உத்தரவிட்டாராம். புதிதாக ஆளுநர்களை நியமித்தாலே பழைய ஆளுநர்களின் பதவி வறிதாகிவிடும் என்றாராம் ரணில்.

# கம்பஹாவில் டெங்கு நிலை கட்டுப்பாட்டை மீறிவருகிறது

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எச்சரிக்கை

கம்பஹா மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் கட்டுப்பாட்டை மீறி வருவதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

கம்பஹா மற்றும் கொழும்பில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சீரான வேகத்தில் அதிகரித்து வருவதாக சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் பிராந்திய அதிகாரிகளின் மெத்தனமான அணுகுமுறையால், இரண்டு மாவட்டங்களிலும் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. டெங்கு பரவுவதைத் தடுப்பதற்கான தரவுகளை ஆய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகள் தவறிவிட்டனர்.

மேலதிக கொடுப்பனவுகளைப் பெறாவிட்டாலும் கூட, நிலைமையைக் கட்டுப்படுத்த தங்கள் முழு ஆதரவையும் வழங்க பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தயாராக உள்ளனர். ஆனால் இதுவரை எந்த ஒரு சிரேஷ்ட அதிகாரியும் தங்களை அணுகவில்லை. நிலைமையைக் கண்டறிந்து கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிபுணத்துவக் குழுவை கம்பஹாவுக்கு அனுப்புவது மிகவும் அவசியமானது.

பிரச்சினையைப் பற்றி முழுமையான புரிதல் இல்லாமல் குடியிருப்புகளுக்குச் செல்வது மற்றும் சீரற்ற சோதனைகளை நடத்துவது வழக்குகளைக் குறைக்க வழிவகுக்காது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொடர்ந்து 24 மணி நேரமும் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதாக குறிப்பிட்டார். ஆனால் சிரேஷ்ட அதிகாரிகளின் ஆதரவு மற்றும் உத்தரவு இல்லாமல் டெங்கு நிலைமை சீரடையாது.

குடியிருப்புகள் அல்லது வணிக வளாகங்களுக்குள் அல்லது சுற்றுப்புறங்களில் நுளம்பு உற்பத்தி செய்யும் இடங்களை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கண்டறிந்தால், அத்தகைய தளங்களின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிகாரிகள் அத்தகைய நபர்களுக்கு அபராதம் விதிக்கலாம் அல்லது அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

### பாடசாலை மாணவர்களுக்கு...

மலையகப் பகுதிகளில் உள்ள டைப் 3 ஆரம்பக் கல்வி பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்குவதற்கான திட்டத்தை முன்னெடுப்பதற்காக 1000 மெட்ரிக் தொன் அரிசி தாய்வான் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் இந்திய தூதரகப் பணிப்பாளர் நாயகம் ஊடாக நேற்று பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபைக்கு நேற்று கையளிக்கப்பட்டது.

இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் கடந்த மார்ச் 17ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது.

அரச சார்பற்ற நிறுவனமான Good Neighbors International இத்திட்டத்துக்கான பங்களிப்பை வழங்கியுள்ளது.

நேற்று வழங்கப்பட்டுள்ள அரிசி, மலையகத்தில் தெரிவுசெய்யப்பட்ட டைப் 3 ஆரம்பப் பிரிவு பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளது.

புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, மாணவர்களின் இடைவிலகளை தடுப்பதற்காகவும் அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடனுமே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சர் உட்பட நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரன், தாய்வான் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் இந்திய தூதரக பணிப்பாளர் ரிச்சட் சீ.எல்.சென், பிரதி பணிப்பாளர் நாயகம் சூ-ஹெசீன் செங், 'Good Neighbors International' தாய்வான் நிறுவனத்தின் செயலாளர் நாயகம் கோ ஜெங் யாங் மற்றும் அதிகாரிகள், அமைச்சின் செயலாளர் எஸ்.சமரதிவாகர, அமைச்சின் அதிகாரிகள், புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய பணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

### வெளியில் நன்றாகத்...

கடமையாற்றி பல தேர்தல்களில் போட்டியிட்டுள்ளேன். நான் 1987ஆம் ஆண்டு முதல் அரசியலுக்கு வந்து மறைந்த ரணசிங்க பிரேமதாசவுடன் இணைந்து இந்தப் பயணத்தை ஆரம்பித்தேன். இதுவரை சஜித் பிரேமதாசவின் தலைமையில் செயற்பட்டேன். ஆனால், கட்சி எடுக்கும் நடவடிக்கைகளில் திருப்தியடைய முடியாது. தனிப்பட்ட ரீதியில் எங்களுடைய அரசியல் பணிகளிலும் எதிர்க்கட்சித் தலைவர் நாட்டுக்காக எடுக்கும் தீர்மானங்களிலும் திருப்தி அடைய முடியாது.

இந்த நாடு முன்னெப்போதும் இல்லாத வகையில் பல நெருக்கடிகளை எதிர்கொண்டது. அந்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து இந்த நெருக்கடிகளுக்கு ஒரே தீர்வு ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டோம். அதற்காகவே உழைத்தோம். அவருக்கு வாக்களித்தோம். ஆனால் அந்த வாய்ப்பு அவரிடமிருந்து பறிபோனது என்றார்.

### நுரைச்சோலை அனல்மின்...

காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

திட்டமிடப்பட்ட பாரிய பழுதுபார்ப்பு பராமரிப்புப் பணிகளுக்காக மின்பிறப்பாக்கி மூடப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

இந்தக் காலப்பகுதியில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது. ஏனைய அனல் மின் நிலையங்களுடன் மின் உற்பத்தி நிர்வகிக்கப்படும். நுரைச்சோலை நிலக்கரி அனல்மின் நிலையத்துக்கான 30ஆவது கப்பல் தற்போது இறக்கப்பட்டு வருகிறது. அதன்படி, தற்போது இலங்கை மின்சார சபையின் நிலக்கரி தேவை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மின்சார சபை தொழிற்சங்கங்கள் மற்றும் சில ஊடகங்கள் முன்னர் ஊகித்ததைப்போன்று மின்தடைகள் ஏற்படாது என அமைச்சர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

### உயிர்த்த ஞாயிறு தின...

சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்ட குற்றப்பத்திரிகை சட்டபூர்வமாக செல்லுபடியாகாது எனத் தெரிவித்த குற்றஞ்சாட்டப்பட்ட தரப்பினர், பூர்வாங்க ஆட்சேபனையை சமர்ப்பித்துள்ளனர்.

இதன் காரணமாக, அதனை நிராகரித்து குற்றவாளிகளை விடுவிக்குமாறு ஆட்சேபனைகள் நீதிமன்றத்தில் கோரப்பட்டிருந்தன.

இது தொடர்பில் நேற்று திங்கட்கிழமை (15) தீர்ப்பை வழங்கிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்ட குற்றப்பத்திரிகையின் செல்லுபடியாகும் தன்மையை ஆராய தமது நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை எனவும் எனவே ஆரம்ப ஆட்சேபனையை நிராகரிப்பதாகவும் தெரிவித்தார். இதனையடுத்து, வழக்கின் முன் விசாரணை ஜூன் 6ஆம் திகதி இடம்பெறும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

### மக்களின் ஆணையின்...

ஏற்பாடுகள் செய்வது அர்த்தமற்றது. வீழ்ச்சியடைந்த நாடு சரியான பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ள தருணத்தில் மீண்டும் போராட்டங்களை நடத்துவது பயனற்றது.

கொழும்பில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதனால் நாட்டின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படும் என்பதுடன், சுற்றுலாப் பயணத்துறைக்கு தாக்கம் ஏற்படும்.

போராட்டம் நடத்துவதனால் ராஜபக்ஷக்களும் ரணிலும் விழப் போவதில்லை. இதனால் ஒட்டுமொத்த நாடே விழும். பாராளுமன்றை தீயிட்டுக் கொளுத்த முயற்சித்தவர்களை முதலில் ஜனாதிபதி கண்டுபிடிக்கவேண்டும் என்றார் நாமல் ராஜபக்ஷ எம்.பி.

### ஜனாதிபதித் தேர்தலை...

அரசாங்கம் தாம் நினைக்கும் நேரங்களில், தாம் நினைக்கும் விதத்தில் தமது காலக்கெடுவுக்கு ஏற்ற வகையில் தேர்தல் வரைபடத்தை உருவாக்குவது ஜனநாயகச் செயல் அல்ல எனவும், ஜனாதிபதியோ அல்லது அவருக்கு ஆதரவானோரின் விருப்பத்துக்கேற்ப தேர்தல் வரைபடத்தை தயாரிப்பது தவறு எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (15) கூடிய எதிர்க்கட்சிகளின் சர்வகட்சி ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

ஆனால், அரசாங்கம் கொண்டுவருவதற்கு தயாராக உள்ள, ஜனாதிபதித் தேர்தலை திட்டமிட்ட நேரத்துக்கு முன்னதாக நடத்தும் பிரேரணையை எதிர்க்கட்சியாக முழுமையாக ஆதரிப்பதாகவும் அதனை விரைவில் நடத்துவதற்குத் தேவையான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கொண்டுவருவதற்குத் தேவையான பூரண ஒத்துழைப்பை நல்குவதாகவும் ஜனாதிபதித் தேர்தல் சவாலை ஏற்றுக்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அதேபோல், எதிர்க்கட்சிகளின் சகல அரசியல் சக்திகளையும் பயன்படுத்தி தேசியக் கொள்கைகள் மற்றும் தேசிய அபிலாஷைகளை மையமாகக் கொண்ட பயணத்துக்கு தயார் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், பத்திரிகைகளிலும் சமூக ஊடகங்களிலும் பல்வேறு செய்திகளை கட்டமைக்காமல் முறையாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால், அதற்குத் தேவையான சகல ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதியொருவரின் கீழ் தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தினால் இழுத்தடிப்புச் செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

### இலங்கையின் பொருளாதாரம்...

செப்டெம்பர் மாதத்துக்கு முன்னர் முழுமையடையச் செய்ய முடியும் என்பதுடன் சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு பெற்றுக்கொடுக்கப்படும் நீடிக்கப்பட்ட கடன் வசதியில் முதல் மீளாய்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் இடம்பெறும் என்று நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிறிஷான் ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள பீட்டர் ப்ரூயர் தலைமையிலான சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் குழு, மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து நேற்று (15) கொழும்பில் விசேட செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தியது. அதன்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வளர்ச்சிக்கு சுமார் 70 சதவீத பங்களிப்பை செலுத்தும்.

பணவீக்கம் தணிந்து வருகிறது. ஆனாலும் பெரும்பாலான நாடுகளில் இலக்குகளை விட அதிகமாக உள்ளது. ஐரோப்பிய மற்றும் அமெரிக்க வங்கித் துறைகளில் நெருக்கடி இழப்புகள் இதுவரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனாலும், வீட்டுத்துறையில் பாதிப்பை ஏற்படுத் தியுள்ளது.

கடந்தகால கொள்கை ரீதியான தவறுகள், தொடர்ச்சியான பொருளாதார சிக்கல் என்பவற்றினால் இலங்கை கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இலங்கை மக்களுக்கு, குறிப்பாக ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் மீதான நெருக்கடியின் தாக்கம் மற்றும் வெளிநாட்டு நிதியுதவியை நாடு அணுகுவதில் ஏற்படும் காலதாமதத்தால் உருவாகும் பொருளாதார செலவுகள் குறித்து ஆழ்ந்த கவலையை தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதியன்று இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்கு ஆதரவாக சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர் கொண்ட 48 மாத விரிவாக்கப்பட்ட நிதி வசதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக சபை அனுமதி வழங்கியுள்ளது.

நெருக்கடியைத் தீர்ப்பதில் இது ஒரு முக்கியமான படியைக் குறித்தது. ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி உட்பட புதிய வெளிநாட்டு நிதியை ஊக்குவிப்பதாக எதிர்பார்க்கப்படும் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டிலிருந்து இலங்கை உடனடியாக சுமார் 330 மில்லியன் டொலர்களை ஆரம்ப மானியமாகப் பெற்றது. நுண் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்ட பலவீனமான வெளிப்புறச் சூழல் மற்றும் உள்நாட்டுக் கொள்கை இறுக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பொருளாதாரம் 2024ஆம் ஆண்டில் 1.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்வதற்கு முன்பு, நடப்பாண்டில் 3 சதவீதமாக சுருங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் ஆதரிக்கப்படும் சீர்திருத்தத் திட்டம் வலுவான கொள்கை நடவடிக்கைகளில் கட்டமைக்கப்பட்டுள்ளது மற்றும் ஐந்து முக்கிய தூண்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது.

முதலாவதாக, ஒரு எதிர்பார்க்கப்படும் வருவாய் அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு, வலுவான சமூக பாதுகாப்பு வலைகள், நிதி நிறுவன சீர்திருத்தங்கள் மற்றும் செலவு மீட்பு அடிப்படையிலான எரிசக்தி விலை நிர்ணயம் ஆகியவை நாட்டின் அனைத்து அத்தியாவசிய செலவினங்களையும் மட்டுப்படுத்தும் திறனை உறுதி செய்ய வேண்டும்.

இரண்டாவதாக, அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு நிலையான நிதியுதவியை உறுதி



உலகப் பொருளாதாரத்துக்கு 2023 ஒரு சவாலான ஆண்டாக மாறியுள்ளது. அதிகரித்து வரும் வட்டி விகிதங்கள் மற்றும் உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளுக்கு இடையிலான போர் என்பவற்றை கருத்தில் கொள்ளும்போது, உலகளாவிய பொருளாதார வளர்ச்சி இந்த வருடத்தில் குறைந்து, வீழ்ச்சியை சந்திக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிலுள்ள வங்கி விவகாரங்கள் நிச்சயமற்ற தன்மையை கொண்டுள்ளன.

இந்தப் பின்னணியில் , ஆசிய - பசுபிக் ஒரு மாறும் பிராந்தியமாக உள்ளது. உலகெங்கிலுமுள்ள முக்கிய பொருளாதாரங்களில் வெளிப்புற தேவை மற்றும் பண இறுக்கம் பலவீனமடைந்தாலும் உள்நாட்டுக்கான தேவை இதுவரை வலுவாகவே உள்ளது. 2022ஆம் ஆண்டில் ஆசியா மற்றும் பசுபிக் நாடுகளில் வளர்ச்சி 3.8 சதவீதத்தில் இருந்தது. இந்நிலையில், இந்த ஆண்டு 4.6 சதவீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இது உலக

செய்வதற்காக கடன் மறுசீரமைப்பு உட்பட பொதுக் கடன் நிலைத்தன்மையை மீளமைக்க வேண்டும்.

மூன்றாவதாக, விலை ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் பணவீக்கத்தின் சுமையை குறைப்பதற்கும் குறிப்பாக ஏழை மக்கள் மீதும், முதலீடு மற்றும் வளர்ச்சிக்கான சூழலை வளர்ப்பதற்கும் அத்தியாவசியப் பொருட்களை வாங்கும் இலங்கையின் திறனை உறுதி செய்வதற்கும் அதிக மாற்று விகித நெகிழ்வுத்தன்மையின் கீழ் கையிருப்புகளை மீளக் கட்டியெழுப்புவதற்கான பல்நோக்கு உபாயங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். நான்காவதாக, நிதித்துறையின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்கான கொள்கைகள், பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதில் நிதித்துறையின் முக்கிய பங்கை வகிக்க உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் ஊழல் பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

### சிறுவர் துஷ்பிரயோகத்தைத்...

16 வயது சிறுமி உயிரிழந்த சம்பவம், களுத்துறை தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவரால் 16 சிறுமிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றமை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை வழங்கினார்.

நாட்டின் குழந்தைகளை பாதுகாப்பதற்கு தனியான சட்டமொன்றைக் கொண்டுவர வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். அதற்காக தற்போதுள்ள சட்டங்களைத் திருத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்த சட்டக் கட்டமைப்பை தயாரிக்கும்போது, கையடக்கத் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் போன்றவற்றை பயன்படுத்தி சிறுவர் துஷ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

அதன்படி, உரிய சட்டங்கள் உருவாக்கப்பட்ட பின்னர் அவை துரிதமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது.

பாடசாலை பாடத்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பெற்றோர் - பிள்ளை உறவுகள் குறித்தும், வீட்டுச்சூழலில் மனநலம் தொடர்பான புதிய கருத்தாடல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

சிறுவர் சந்ததியினரைப் பாதுகாப்பதற்கு கடுமையான சட்டங்களைக் கொண்டுவரும் அதேவேளையில், பிள்ளைகளின் மனநிலையைப் புரிந்துகொண்டு பரந்த மனப்பான்மை கொண்ட பிள்ளையை உருவாக்குவதற்கும் சமூகத்தின் மனப்பாங்கை வளர்ப்பதற்கும் அரச மற்றும் தனியார் நிறுவன மட்டத்தில் தனியான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தியுள்ளார்.

### களுத்துறை 16 வயது...

சந்தேகநபர்கள் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டபோது உயிரிழந்த மாணவியின் தாயார் உட்பட கிட்டத்தட்ட 100 பேர் நீதிமன்றத்துக்கு முன்பாக நின்று மௌனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### தேர்தலை நடத்தாமல்...

தேர்தலை நடத்தாமல் இருப்பது தவறான விடயம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் கூறியதாவது,

தமிழரசுக் கட்சியின் யாப்பில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக பேசியிருக்கிறோம். அது தொடர்பில் நீண்டகாலமாக பல்வேறு விடயங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை உள்ளடக்குவதுடன், புதிய திருத்தங்களை சேர்ப்பதற்குமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு புதிய குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான விடயங்கள் தற்போது சபையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ஆராய்ந்துள்ளோம். முழு ஆவணத்தையும் பார்ப்பதற்கு எமக்கு நேரம் போதவில்லை. எனவே, பிறிதொரு தினத்தில் அது தொடர்பாக ஆராய்வோம்.

ஜனாதிபதியுடனான எமது சந்திப்பில் அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்களே பேசப்படும் என சொல்லப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக ஏற்கனவே நான்கு தடவைகள் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளோம். செய்யப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக எழுத்துவடிவிலும் அவருக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். வெறுமனே சட்டங்களை திருத்தி விட்டு மாகாண சபைகள் இயங்காமல் விட்டால் அதில் அர்த்தமில்லை. ஒரு அரசாங்கம் செய்யவேண்டிய விடயத்தை ஒரு கட்சி செய்துள்ளது. தனிநபர் சட்டமூலம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கின்றேன். அதனை சிங்களத் தரப்பைச் சேர்ந்த இருவர் சவாலுக்குட்படுத்தியதுடன் உச்சநீதிமன்றத்தில் அது தொடர்பில் ஒரு விவாதமும் இடம்பெற்றது.

அதனடிப்படையில், உயர்நீதிமன்றம் இது தொடர்பான தீர்ப்பினை பாராளுமன்றுக்கும் ஜனாதிபதிக்கும் அறிவிக்கும். இந்த சட்டமூலத்தை அமுல்படுத்தினால் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த முடியும். அவ்வாறு நடத்தும்போது பழைய தேர்தல் முறையிலேயே நடத்தலாம். தேர்தல் முறையில் சீர்திருத்தம் செய்வது நல்ல விடயம். ஆனால் சீர்திருத்தம் இன்னும் செய்யவில்லை என்ற காரணத்துக்காக தேர்தலை நடத்தாமல் இருப்பது தவறான விடயம். எனவே, தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும். மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையான வாக்குரிமையை அரசாங்கம் மறுதலிக்கக்கூடாது.

இதேவேளை, மஹிந்தவை பிரதமராக நியமிக்கப்போவதாக ஒரு வதந்தி ஒன்று பரவியது. அப்படி நடந்தால் கடந்த வருடம் போராட்டம் நடத்தியவர்கள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடும் எனும் பயத்தினால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாகவே நாம் அறிகின்றோம்.

திருகோணமலையில் பதற்றம் ஒன்று நிலவியது. இந்த விடயம் தொடர்பாக சம்பந்தன் ஜனாதிபதியிடம் முன்னரே கூறியிருந்தார். அங்கு சிலை வைக்க அனுமதிக்க மாட்டோம் என்று ஜனாதிபதி எமக்கு தெரிவித்திருந்தார். சிலை வைக்கப்படவில்லை என்ற செய்தி எமக்கு கிடைத்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தொகுதி கிளைக்கூட்டத்தில் எந்த கைகலப்பும் இடம்பெறவில்லை. கூட்டம் முடிந்த பின்னர் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக எம்மிடம் கேட்கமுடியாது என்றார்.

### யாழ். இளைஞன்...

அவரது இல்லத்தில் ஏற்பாடு செய்திருந்தார்.

அந்த ஊடக சந்திப்பில் அவர் பல திடுக்கிடும் அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டிருந்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

படுகொலை செய்யப்பட்ட எனது மகன் கடந்த 2022.04.19 அன்று டுபாய்க்கு வேலை வாய்ப்புக்காக ஃப்ரீ விசாவில் சென்று 6 மாதங்கள் விடுதி ஒன்றில் பணியாற்றினார். 6 மாதங்கள் வேலை செய்தால் வேக்கிங் விசா குத்துவதாக கூறினார்கள். அதனடிப்படையில், எனது மகன் 6 மாதங்கள் வேலை செய்து வேக்கிங் விசா 2 வருடங்களுக்கு வழங்கப்பட்டது.

அந்த வேக்கிங் விசா வழங்கும்போது தங்குமிடம், சாப்பாடு என்பன இலவசமாக வழங்கப்படும் என கூறப்பட்டபோதும் தங்குமிடம் வழங்கப்படவில்லை. அவர் வெளியிலேயே வாடகை தங்குமிடத்தில் தங்கினார். வேக்கிங் விசா குத்தும்போது அந்த நாட்டு நாணயத்தில் 3000 வழங்குவதாக கூறிவிட்டு 1800 தான் வழங்கப்பட்டது.

எனது இரண்டாவது மகன் டுபாய்க்கு சென்று ஒரு வாரத்தின் பின்னரே எனது மூத்த மகன் நிலக்ஷன் சென்றவர். இருவரும் ஒரு ஹோட்டலில் தான் வேலை செய்தார்கள். இந்நிலையில் கடந்த 27ஆம் திகதி எனது இரண்டாவது மகன் எனக்கு வீடியோ அழைப்பை மேற்கொண்டு, மூத்த மகனின் சடலத்தை காட்டி, "அம்மா எனக்கு விடுதியின் காவலர் தொலைபேசி அழைப்பு மேற்கொண்டு, அண்ணா கத்திக்குத்துக்கு உள்ளாகி ரூமில் விழுந்து கிடப்பதாக கூறினார்.

தற்போது எனக்கு தெரிந்தவரையில், இவர் முதல் கடையில் வேலை செய்து கொண்டிருக்கின்ற வேளையில், இந்தியா சென்னையைச் சேர்ந்த பெண் ஒருவர் சாப்பிடுவதற்கு செல்கின்றவராம். அவர் அங்கு சென்று இவருடன் பழகி தொலைபேசி மூலம் பேசும் அளவுக்கு பழக்கம் ஏற்பட்டது.

பின்னர் கடந்த இரண்டு மாதங்களாக எனது மகனை அழைத்து தனது விடுதியில் தங்க வைத்துள்ளார். பின்னர் ஒரு மலையாளியுடன் சேர்ந்து இவரை வைத்து 20 இலட்சம் கடன் பெற்றுள்ளார்கள். பின்னர் இவரது சம்பளப் பணத்தையும் பெற்று விட்டார்.

ஏப்ரல் 24ஆம் திகதிக்கு பின்னர் எனது மகனுக்கும் எனக்கும் இடையே தொடர்பு இல்லை. டுபாய் பொலிஸார், இது தற்கொலை என முதல் கூறினார்கள், பின்னர் இது ஒரு கொலை என கூறுகின்றனர். வைத்தியர்களுடைய அறிக்கை வந்த பின்னர் தான் எதுவும் கூறலாம் என கூறுகின்றனர்.

அந்தப் பெண் எனது இறந்த மகனின் தொலைபேசியில் எங்களுடன் பேசியதை பதிவு செய்து டுபாயில் உள்ள எனது மற்றைய மகனுக்கு அனுப்பினேன். அவர் அதை டுபாய் பொலிஸாருக்கு காட்டுவதற்கு சென்றவேளை அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் அவரை விரட்டியடித்தனர்.

காணாமல்போயுள்ளதாக கூறப்படும் எனது மகனின் தொலைபேசி அந்தப் பெண்ணிடம் இருப்பதால் அவர் அதிலுள்ள ஆதாரங்களை அழிக்கக்கூடும். அந்த தொலைபேசிக்கு நாங்கள் வட்ஸ்அப் மெசேஜ் போடும்போது அதனை அந்தப் பெண் பார்க்கிறார். ஆனால் பதில் எதுவும் போடுவதில்லை.

தற்போது அங்கிருக்கும் எனது மற்றைய மகனுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக அவர் கூறுகின்றார். நான் இங்கு உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புடன் தொடர்புடைய சில இடத்துக்கும் சென்று கடிதங்களை வழங்கி விட்டேன். ஆனால், பதில் எதுவுமில்லை. எனவே, உரிய தரப்பினர் எனது மகனின் சடலத்தை இங்கு கொண்டுவந்து இறுதிச் சடங்கினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும். அத்தோடு என்னுடைய மற்றைய மகனையும் பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வர வழி செய்ய வேண்டும் என்றார்.

# முதலீட்டு துறையில் இணைந்து செயற்பட சுவீடன் அரசாங்கம் இணக்கம் தெரிவிப்பு




இரண்டாவது, ஐரோப்பிய ஒன்றியம் - இந்தோ பசுபிக் மன்றத்தில் பங்கேற்பதற்காக ஸ்டொக்ஹோமுக்கு விஜயம் செய்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, சுவீடன் நாட்டுப் பிரதமர் டோபியாஸ் பில்ஸ்ட்ரோவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது, இருதரப்பு உறவுகளின் அனைத்துத் துறைகளிலும் ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்கான உறுதிமொழியுடன் இருதரப்புக் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளார்.

இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான பல தசாப்தங்களாக இருந்துவரும் பழமையான, பன்முகத்தன்மை கொண்ட, கூட்டாண்மையை நினைவுகூரிய அதே வேளை, இரு அமைச்சர்களும் 1949 இல் நிறுவப்பட்ட இராஜதந்திர உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவை 2024 இல் பொருத்தமான முறையில் நினைவுகூருவதற்கு ஒப்புக்கொண்டுள்ளனர்.

அரசியல், பொருளாதாரம், அபிவிருத்தித் துறைகள் உட்பட நீண்டகால ஈடுபாட்டுக்கு இடையூறான அனைத்துப் பகுதிகள் குறித்தும் இருதரப்பினரும் இதன்போது கலந்துரையாடியுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்கு இரு அமைச்சர்களும் வலுவான முக்கியத்துவம் அளித்ததுடன் முதலீடு, வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம், காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல துறைகளில் இணைந்து பணியாற்றுவதற்கும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் விரிவாக்கப்பட்ட நிதி வசதியைத் தொடர்ந்து, பொருளாதார மீட்சியின் பாதை குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சப்ரி சுவீடன் நாட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு விளக்கினார். இலங்கையுடனான சர்வதேச நாணய நிதியம் பேச்சுவார்த்தைகளின் போது, பாரிஸ் கழகத்துக்கான சுவீடனின் ஆதரவை அவர் பாராட்டினார்.

பொருளாதார உறவுகள் குறித்த கலந்துரையாடல்கள் வர்த்தகத்தை மேம்படுத்துதல், சுவீடன் விநியோகச் சங்கிலிகளுக்கான உற்பத்தித் தளங்களைப் பல்வகைப்படுத்துதல், தகவல் தொழில்நுட்பத் துறையில் வணிகத் தொடர்பை மேலும் மேம்படுத்துதல், உற்பத்தி, சுற்றுலா மற்றும் குறிப்பாக இலங்கையின் மூலோபாய இருப்பிடம் மற்றும் கொழும்பு துறைமுக நகரத்துக்குள் நிதி மையத்தின் தோற்றம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு முதலீடு ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டன. சுவீடன் மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளுக்கான விநியோக ஆதாரங்களை பல்வகைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் அவர் பேசினார்.

நீதித்துறை மற்றும் சட்டவாக்கச் சீர்திருத்தம், காணி விடுவிப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றம், வாழ்வாதாரம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, நல்லிணக்கச் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் அமைச்சர் சுவீடன் தரப்புக்கு விளக்கியுள்ளார். இருதரப்பு அரசியல் ஆலோசனைகளை முன்கூட்டியே கூட்டுவது குறித்தும் கலந்துரையாடல்களில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் முன்னேற்றம் உள்ளிட்ட சர்வதேச முன்னேற்றங்கள் குறித்தும் இரு அமைச்சர்களும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டுள்ளனர்.

இரண்டாவது, ஐரோப்பிய ஒன்றியம் - இந்தோ பசுபிக் மன்றத்தில் அமைச்சர் சப்ரி, அதிக நிலையான மற்றும் உள்ளடக்கிய செழுமையை ஒன்றாகக் கட்டியெழுப்புதல் என்ற முதலாவது வட்டமேசை கலந்துரையாடலை இணைந்து ஒருங்கிணைத்ததுடன், முக்கிய மன்றத்தின் பக்க அம்சமாக, பல ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளுடன் தனது இருதரப்பு ஆலோசனைகளைத் தொடர்வதற்கு அமைச்சு எதிர்பார்த்து வெளியிட்டுள்ளது.

# கட்டுப்பாட்டு நடவடிக்கையின்மையே டெங்கு பரவலுக்கு பிரதான காரணம்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குற்றச்சாட்டு

தரவுகளை பரிசீலனை செய்து டெங்கு பரவலை கட்டுப்படுத்துவதற்கு தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மற்றும் மாகாண அதிகாரிகள் முறையான நடவடிக்கைகளை எடுக்காமையின் காரணமாகவே தற்போது டெங்கு பரவல் அதிகரித்து வருவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் டெங்கு காய்ச்சல் மிக தீவிரமாக பரவி வருகிறது. மேல் மாகாணத்தை பொறுத்தவரையில் கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களிலும் டெங்கு விரைவாக பரவலடைந்து வருகிறது. நாளுக்கு நாள் நோயாளர் அடையாளங்காணப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக கம்பஹா மாவட்டத்தில் கட்டுப்பாட்டை மீறி டெங்கு தொற்று பரவலடைந்துள்ளது.

தரவுகளைப் பரிசீலனை செய்து டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு, மாகாண அதிகாரிகள் முறையான நடவடிக்கைகளை எடுக்காமையினாலும் இதுதொடர்பில் அவர் திட்டமெதனையும் வகுத்திருக்காததாலுமே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது.

எது எவ்வாறாயினும், சுகாதார அமைச்சின் கீழிருக்கும் தொழில்நுட்ப ஆற்றல் கொண்ட பொது சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட அதிகாரிகளை கம்பஹா போன்ற பிரதேசங்களில் நியமித்து, அந்த பகுதிகளில் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

அவ்வாறு இல்லாமல், தொழில்நுட்ப அனுபவம் இல்லாத அதிகாரிகளினூடாக பொதுமக்களின் வீடுகளை சோதனைக்கு உட்படுத்துவதால் சாதகமான பலன்கள் கிடைக்கும் என நாங்கள் கருதவில்லை. எனவே, இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் என்ற அடிப்படையில் எமது அதிகாரிகள் கொடுப்பனவுகளின்றி கடமைகளில் ஈடுபட தயாராக இருக்கிறோம். இருந்தபோதும், இதுவரையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொது சுகாதார பரிசோதகர்களின் உதவியைக் கோரவில்லை.

நுளம்பு பரவும் இடங்களை சோதனைக்கு உட்படுத்த வேண்டியது அவசியமாகும். குறிப்பாக உயிர்களை பாதுகாத்துக் கொள்வதற்காக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. குறிப்பாக 25,000 ரூபா தண்டபணம் விதிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதுடன் சிறைத் தண்டனை வழங்குவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன என்றார்.

# தாய்வான் அரசாங்கத்திடமிருந்து 1000 மெட்ரிக் தொன் அரிசி கையளிப்பு

மலையக பகுதிகளிலுள்ள டைப் 3 ஆரம்பக் கல்வி பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்குவதற்கான திட்டத்தை முன்னெடுப்பதற்காக 1000 மெட்ரிக் தொன் அரிசி, தாய்வான் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் இந்திய தூதரக பணிப்பாளர் நாயகத்தினூடாக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (15) உத்தியோகபூர்வமாக பெருந்தோட்ட பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் கடந்த மார்ச் 17 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது.



இன்று வழங்கப்பட்டுள்ள அரிசி, மலையகத்தில் தெரிவுசெய்யப்பட்ட டைப் 3 ஆரம்பப் பிரிவு பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளது. புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, மாணவர்களின் இடைவிலகலை தடுப்பதற்காகவும் அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடனேயுமே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சர் உட்பட நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் வைகாசி மாதம் 02 ம் நாள் செவ்வாய்கிழமை**

**மேஷம்:** குடும்ப உறவில் அக்கரை காட்டுங்கள். தேவையற்ற கருத்து வேறுபாடுகளுக்கு இடம் கொடாதீர்கள்.

**ரிஷபம்:** அரசாங்க வகையில் பல சலுகைகள் நீங்கள் அடைவீர்கள். மூத்தவர்களின் உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்:** தொழில்-வியாபாரத்தில் உங்கள் முயற்சி பலிக்கும் நாள்.உங்கள் தொழில் நிமித்தமான பயணங்கள் அமையும்.

**கடகம்:** தந்தைவழி நன்மைகள் சொத்து சுகங்களை அடைவீர்கள். தான தர்மங்களால் புண்ணியம் சேர்ப்பீர்கள்.

**சிம்மம்:** கடவுள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். மனதைக் கெடுத்துக் கொள்ளாது அமைதியாக இருங்கள்.

**கன்னி:** உங்கள் புகழ், செல்வாக்கு இன்று உயரப் போகின்றது.அரச வகையில் இலாபங்களை அடைவீர்கள்.

**துலாம்:** மனதையும் உடலையும் கெடுத்துக் கொள்ளாதீர்கள். சிரித்துப் பேசும் மறைமுக எதிரிகளிடம் எச்சரிக்கையாக இருங்கள்.

**விருச்சிகம்:** அரச உயர் மட்ட உதவிகள், அழைப்புகள் உண்டு. குழந்தைகளால் அதிக நன்மைகளையும் இலாபங்களையும் பெறுவீர்கள்.

**தனுசு:** தாயின் முழுமையான அன்பும் ஆசியும் கிடைக்கும் நன்நாள். வீடு வாகன வகையில் சுப செலவுகள் உண்டு.

**மகரம்:** உங்கள் செயல் திறமையால் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள்.நண்பர்களால் பாராட்டப்படுவீர்கள்.

**கும்பம்:** குடும்பத்துக்கான சுப செலவுகள் ஏற்படும், ஆனாலும் தேவைக்கான பணம் நிச்சயம் கிடைக்கப் போவதால் கவலை வேண்டாம்.

**மீனம்:** உங்கள் உடல் இன்று ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். வீணாக மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

| | |
|---|---|
| **திதி** | : துவாதசி பி.இ. 11.36 வரை பின் திரயோதசி (தேய்) |
| **நட்சத்திரம்** | : உத்தரட்டாதி மு.ப.8.15 வரை பின் ரேவதி |
| **யோகம்** | : அமிர்த யோகம் மு.ப. 8.15 பின் சித்தம் |
| **வார சூலை** | : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : மு.ப. 7.53 – 8.53 மணி வரை |
| **ராகு காலம்** | : 2.53 – 4.23 மணி வரை |
| **எமகண்டம்** | : 8.53 – 10.23 மணி வரை |
| **குளிகை** | : 11.53 – 1.23 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிஷ்டம்** | : பூசம்,அனுஷம், உத்தரட்டாதி (பிறந்தவர்களுக்கு) |
| **விஷேட தினம்** | : -------- |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739





தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சர்வ மதமும் இணைந்து நடத்திய விளையாட்டுப் போட்டி கலைஞர் டிஸ்கோ ராஜாவின் அறக்கட்டளை ஏற்பாட்டில் ஆட்டுப்பட்டித்தெருவில் இடம்பெற்றது. ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜித் மெத்தா நந்த தலைமையில் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் நடுவராக கடமையாற்றி இருந்தார்கள்.வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. (படங்கள்- மொஹமட் நசார்)


## வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/





தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamileditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மே 16ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை**

# டெங்கு அபாயத்தை கவனத்திற்கொள்வோம்!

நாடு முழுவதிலும் உள்ள 59 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. கடந்த வாரத்தை விட இந்த வாரத்தில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 3 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இதுவரை சுமார் 32,000 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எனப் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, குருநாகல், கல்முனை, புத்தளம், இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது மழை பெய்வதால் டெங்கு நுளம்புகள் பெருகும் என்றும், நுளம்புகள் உற்பத்தியாகாத சூழலை பராமரிப்பதன் மூலம் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும் என்றும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

டெங்கு நோய் என்பது வைரஸ் மூலம் பரவுகின்ற ஒரு நோய் என்பதுடன், நோய்த்தொற்றுள்ள ஒரு நுளம்பு காவியாக செயற்படுகிறது. மேலும், கட்டமைப்பு ரீதியாக நோயைப் பரப்புவதில் வித்தியாசமான வைரஸ்களும் செயற்படுகின்றன

டெங்கு தொற்றுவதன் மூலம் ஏற்படும் நோய் நிலைமைகள் மிகப் பெரிய வீச்சினுள் விரிந்து செல்வதுடன், சில நபர்களிடம் எந்தவித நோய் அறிகுறிகளும் தென்படமாட்டாது. இன்னும் சிலரிடம் நோய் அறிகுறிகள் தென்படும். நோய் அறிகுறிகளைக் கொண்ட நபர்களுள் பெரும்பாலானவர்களிடம் சாதாரண வைரஸ் காய்ச்சல் நிலைமை, டெங்கு காய்ச்சல் அல்லது அசாதாரண நோய் அறிகுறிகளுடன் கூடிய டெங்கு குருதிப்பெருக்கு நிலைமை ஏற்பட முடியும். டெங்கு காய்ச்சல் காரணமாக ஆகக் கூடுதலாக காணக் கிடைப்பது டெங்கு காய்ச்சல் மற்றும் டெங்கு குருதிப்பெருக்கு நிலைமை என்பதுடன், அசாதாரண நோய் அறிகுறியுடன் கூடிய டெங்கு நோய் நிலைமைகள் மிக அபூர்வமாகவே நிகழ்கின்றன.

டெங்கு காய்ச்சல் – டெங்கு காய்ச்சலின் போது ஒரேயடியாக ஏற்படும் கடுமையான காய்ச்சல், கடுமையான தலைவலி மற்றும் பின்புறக் கண்களில் வலி, மூட்டுக்களிலும் தசைகளிலும் வலி என்பன பெரும்பாலும் ஏற்படுவதுடன், சில நோயாளர்களுக்கு சிவப்பு நிற பரந்துபட்ட தன்மையில் கொப்புளங்கள் மற்றும் சில வேளைகளில் குருதி கசியும் நிலைமைகள் (முரசுகளிலிருந்து, மூக்கிலிருந்து, சளி மற்றும் தோல் என்பவற்றிலிருந்து) ஏற்படும்.

டெங்கு குருதிப்பெருக்கு – டெங்கு குருதிப்பெருக்கு, டெங்கு தொற்றின் உச்சக்கட்ட நோய் நிலைமை ஆவதுடன், மிகவும் சிறிய எண்ணிக்கையான நோயாளர்களுக்கு இந்நிலைமை ஏற்படுகிறது. டெங்கு குருதிப்பெருக்கு நோயின்போது பெரும்பாலும் தெளிவாக வித்தியாசப்படுத்தி இனங்காண முடியுமான 3 கட்டங்கள் காணப்படுவதுடன், அவை காய்ச்சலுடன் கூடிய கட்டம் (இக்கட்டத்தின் போது 7 தினங்களுக்கு குறைவாகக் காணப்படும் கடுமையான காய்ச்சலுடனான காலம்), நெருக்கடியான கட்டம் (நெருக்கடியான கட்டம் ஆரம்பமாவது திரவவிழையம் கசிய ஆரம்பித்தல் மற்றும் சதாதாரணமாக காய்ச்சல் தணிந்து செல்லலுடனேயாகும்).

மேலும், தொடர்ச்சியாக வாந்தியெடுத்தல், வயிற்று வலி, கடுமையான தாகம், கடுமையான உறக்கமும் மயக்க நிலைமையும், உணவு மீதுள்ள வெறுப்பு, அசாதாரண குருதி வடியும் நிலைமை (உதாரணமாக மாதவிடாய்ச் சுற்றின்போது அதிகமான குருதிப்பெருக்கு இடம்பெறல்), குறித்த தினத்திற்கு முன்னர் மாதவிடாய்ச் சுற்று இடம்பெறல், கை - கால்களில் குருதியற்ற மற்றும் குளிரான தன்மை, அமைதியின்மை மற்றும் குழப்ப நிலைமை, தோலின் நிறம் மாற்றமடைதல், சிறுநீர் வெளியேறாமை அல்லது குறைவாக சிறுநீர் வெளியேறல், நடத்தையில் மாற்றம் – மயக்கம் என்பனவென மருத்துவர்கள் கூறுகின்றனர்.

டெங்கு காய்ச்சலுக்கு எனத் தனி சிகிச்சை எதுவும் இல்லை. வைரஸ் பாதிப்பால், இரத்தத்தில் உள்ள தட்டணுக்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டேவரும். தட்டணுக்கள் குறைந்தவர்களுக்கு அதை ஈடுகட்ட நரம்பு மூலமாக தட்டணுக்கள் கொண்ட இரத்தம் செலுத்தப்பட வேண்டும். உடலில் உள்ள நீர்ச்சத்து குறையாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

டெங்கு காய்ச்சலைப் பொறுத்தவரை மருத்துவக் கண்காணிப்பில் இருப்பது மிகவும் நல்லது. டெங்கு பாதிப்புக்கு உள்ளாகிறவர்களில் ஒரு சதவிகிதத்துக்கும் குறைவான நபர்களுக்கு இரத்தக்கசிவு நோய் மற்றும் டெங்கு ஷொக் சிண்ட்ரோம் ஏற்படலாம் என்கின்றனர் மருத்துவர்கள். அதாவது, தட்டணுக்கள் குறைந்து, நுரையீரல் கூடு பகுதியில் நீர் தேங்கும்போது டெங்கு ஷொக் சிண்ட்ரோம் வருவதற்கான வாய்ப்புகள் உண்டு. அந்தத் தருணத்தில் உயிரிழப்பு ஏற்படும் ஆபத்து உண்டு. எனவே, மருத்துவக் கண்காணிப்பிலிருந்து, உரிய நேரத்தில் உரிய மருந்துகள் எடுத்துக்கொள்வதன் மூலம் இந்நிலை ஏற்படாமல் காப்பாற்ற முடியும். சுய சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல் காய்ச்சல் வந்தவுடனேயே மருத்துவரை அணுகுவதே பாதுகாப்பானது.

# வெற்றியும் தோல்வியும்!



கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் வரலாறு காணாத வெற்றியை அடைந்திருக்கிறது காங்கிரஸ். 224 உறுப்பினர்களைக் கொண்ட சட்டப்பேரவையில் 135 தொகுதிகளை 43.1% வாக்குகளுடன் கைப்பற்றி காங்கிரஸ் வெற்றியடைந்திருக்கிறது. பா.ஜ.க. 66 தொகுதிகளிலும், மதச்சார்பற்ற ஜனதாதளம் 19 தொகுதிகளிலும் மட்டுமே வெற்றியடைந்திருக்கின்றன. 1989க்குப் பிறகு இந்த அளவிலான வெற்றியை எந்தவொரு கட்சியும் மாநிலத்தில் பெற்றதில்லை.

காங்கிரஸின் அபார வெற்றிக்கு மிக முக்கியமான காரணம், உட்கட்சிப் பூசல்களை ஒதுக்கிவைத்துவிட்டு முன்னாள் முதல்வர் சித்தராமையாவும் கட்சியின் மாநிலத் தலைவர் டி.கே.சிவகுமாரும் இணைந்து பணியாற்றியமையாகும். சித்தராமையாவின் மக்கள் செல்வாக்கும் டி.கே.சிவகுமாரின் பண பலத்துடன் கூடிய கட்சித் தலைமையும் பிளவுபட்டுக் கிடந்த பா.ஜ.கவை எதிர்கொண்டன.

காங்கிரஸின் வெற்றிக்கு இன்னொரு காரணம் அந்தக் கட்சியின் வாக்குறுதிகள். வறுமைக்கோட்டுக்கு கீழேயுள்ளவர்களுக்கு 10 கிலோ உணவுதானியம், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2,000 உரிமைத்தொகை, ஒவ்வொரு வீட்டுக்கும் 200 யூனிட் வரை இலவச மின்சாரம் என்று வாக்குறுதிகளை வாரி வழங்கியிருக்கிறது காங்கிரஸ். அதன் நேரடி விளைவுதான் நகர்ப்புறங்களில் பா.ஜ.கவும், கிராமப்புறங்களில் காங்கிரஸும் அதிக இடங்களை வென்றிருப்பதாகும். அமைய இருக்கும் காங்கிரஸ் அரசு இந்த வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றப்போகிறது என்பதில்தான் கர்நாடகாவில் 2024 மக்களவைத் தேர்தலும், காங்கிரஸின் செல்வாக்கும் அமையப் போகின்றன.

ஆட்சியிலிருந்த பா.ஜ.க. தோல்வியடைந்திருக்கிறது என்றாலும், அதன் வாக்கு விகிதத்தில் பெரிய அளவிலான சறுக்கல் இல்லை. 2018இல் 36.4% வாக்குகள் பெற்றிருந்த பா.ஜ.க, இந்த தேர்தலில் 35.7% பெற்றிருக்கிறது. வேடிக்கை என்னவென்றால், இதற்கு முன்னால் பா.ஜ.கவுக்கு செல்வாக்கு இல்லாமல் இருந்த பகுதிகளில் அக்கட்சிக்கு அதிக வாக்குகளும் இடங்களும் கிடைத்திருக்கின்றன என்பதுதான்.

2013இல் எடியூரப்பா பா.ஜ.கவிலிருந்து விலகி கர்நாடக ஜனதா பக்ஷா என்ற கட்சியைத் தொடங்கினார். லிங்காயத்து சமூகத்தினர் அதிகமுள்ள 48 தொகுதிகளில் 20% வாக்குகளுடன் 6 இடங்களில்தான் அவரால் வெற்றிபெற முடிந்தது. 2018இல் பா.ஜ.கவுடன் எடியூரப்பா மீண்டும் இணைந்தபோது அந்த 48 தொகுதிகளில் 29 தொகுதிகளை பா.ஜ.க கைப்பற்றியது என்பதைக் கவனிக்க வேண்டும்.

இந்த முறை எடியூரப்பா முதல்வர் பதவியிலிருந்து அகற்றப்பட்டமை லிங்காயத்து சமுதாயத்தினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. அவர்களைச் சமாதானப்படுத்த லிங்காயத்தான பசவராஜ் பொம்மை முதல்வராக்கப்பட்டார் என்றாலும்கூட அந்த அதிருப்தி அகலவில்லை என்பதைத்தான் தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன.

பா.ஜ.க. தனது 2018 வாக்கு விகிதத்தைத் தக்கவைத்தது என்றாலும்கூட, மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் தனது செல்வாக்கில் சரிவை எதிர்கொண்டமை தெரிகிறது. வழக்கத்துக்கு மாறாக தென் கர்நாடகத்திலும் பழைய மைசூரு பகுதியிலும் பா.ஜ.க. பல இடங்களில் வெற்றிபெற்றாலும்கூட, அதன் செல்வாக்கு கேந்திரம் என்று கருதப்படும் மும்பை - கர்நாடகப் பகுதியில் பெரிய பின்னடைவை எதிர்கொண்டிருக்கிறது.

பசவராஜ் பொம்மை தலைமையிலான முந்தைய பா.ஜ.க. அரசின் செயற்பாடுகள் திருப்திகரமாக இருக்கவில்லை. நிர்வாகம் சீர்கெட்டிருந்தது என்பது மட்டுமல்லாமல், ஊழல் குற்றச்சாட்டுகளும் மலிந்திருந்தன. ஆட்சிக்கு எதிரான மனநிலை மக்கள் மத்தியில் காணப்பட்டதால்தான் பா.ஜ.க. தலைமை தனது தேர்தல் அணுகுமுறையை மாற்ற முற்பட்டது.

பிரதமர் நரேந்திர மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் முழுமூச்சாக தேர்தல் பிரசாரத்தில் இறங்கி மாநிலப் பிரச்சினைகளைப் பின்னுக்குத் தள்ளும் உத்தியைக் கையாண்டனர். பிரதமரை முன்னிறுத்தி நடத்தப்பட்ட சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. போட்ட கணக்கு வெற்றிபெறவில்லை என்பதைத்தான் தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன. ஒருவேளை பிரதமரின் பிரசாரம் 2024 மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு சாதகமாகக்கூடும்.

சமீபத்திய தேர்தல் முடிவுகள் 2024 மக்களவைத் தேர்தலில் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. 2018 சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு தனிப்பெரும்பான்மை தராத கர்நாடக வாக்காளர்கள், 2019 மக்களவைத் தேர்தலில் 28 இடங்களில் 25 இடங்களை பா.ஜ.கவுக்கு வழங்கினார்கள். அதுமட்டுமல்லாமல், கர்நாடகாவுக்கு இன்னொரு ராசியும் உண்டு. 1969 முதல் கர்நாடகாவில் ஆளும் கட்சி மத்தியில் ஆட்சி அமைக்காது என்பதுதான் அது. (2018இல் காங்கிரஸ் ஆதரவுடன் மதச்சார்பற்ற ஜனதா தளத்தின் குமாரசாமி முதல்வரானார்.)

பா.ஜ.க. அடைந்திருக்கும் தோல்வி ஆச்சரியப்படுத்தவில்லை. 2014 முதல் தற்போது நடந்து முடிந்தது வரையிலான 57 சட்டப்பேரவைத் தேர்தல்களில், பா.ஜ.க. 29இல் தோல்வியைத் தழுவியிருக்கிறது. வெற்றிபெற்ற 28 தேர்தல்களில் தனிப்பெரும்பான்மை பெற்ற சட்டப்பேரவைகள் 12 மட்டுமே. ஏனைய பேரவைகளில், அதிக எண்ணிக்கை பெற்ற கட்சியான பா.ஜ.க. சுயேச்சைகள் உட்பட மற்றவர்களின் ஆதரவுடன்தான் ஆட்சியமைத்தது. பா.ஜ.கவின் பலமே தோல்வியில் துவளாமல், அடுத்தகட்ட வியூகத்தை அமைப்பதுதான்.

என்னதான் குறை சொன்னாலும் தேர்தல் ஆணையம் முறையாகவே செயற்படுகிறது என்பதிலும், ஆட்சி மாற்றத்தின் மூலம் அதிருப்தியை வெளிப்படுத்தி வாக்காளர்கள் தங்களது ஜனநாயக உணர்வை நிலைநாட்டத் தவறுவதில்லை என்பதையும் கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவு நமக்கு உணர்த்துகிறது.

*(நன்றி - தினமணி)*

## நக்கல் நமசிவாயம்

***வடிவேல் சுரேஷ் எம்.பி. இன்றைக்கு எந்தக்கட்சியில இருக்கிறார்... நாளைக்கு எந்தக் கட்சியில இருப்பார் எண்டது அந்த கடவுளுக்கும் தெரியுமோ தெரியாது..!***



## இன்றைய நாளில்...

- 1667 – யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக வாக்கிய பஞ்சாங்கம் இராமலிங்க முனிவரால் வெளியிடப்பட்டது.
- 1916 – யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக வெசாக் பண்டிகை அங்குள்ள சிங்கள மக்களால் கொண்டாடப்பட்டது.
- 1932 – மும்பையில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இடம்பெற்ற கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
- 1969 – சோவியத்தின் வெனேரா-5 விண்ணுளவி வெள்ளிக்கோளில் இறங்கியது.
- 1975 – பொது வாக்கெடுப்பின் அடிப்படையில் சிக்கிம் இந்தியாவின் ஒரு மாநிலமாக இணைக்கப்பட்டது.
- 1985 – தம்பிலுவில் படுகொலைகள்: இலங்கையின் தம்பிலுவில் கிராமத்தில் அடுத்த மூன்று நாட்களில் 63 வரையான தமிழ் இளைஞர்கள் சிறப்பு அதிரடிப் படையினரால் கொல்லப்பட்டனர்.
- 1992 – எண்டெவர் விண்ணோடம் தனது முதலாவது பயணத்தை முடித்துக் கொண்டு பூமிக்குத் திரும்பியது.
- 2006 – தமிழ்நாட்டில் அனைத்து சாதியினரும் கோயில்களில் அர்ச்சகராகத் தகுதி உடையவர்களாக அறிவிக்க மு.கருணாநிதி தலைமையிலான தமிழக அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டது.

# முள்ளிவாய்க்கால் நினைவு வார நிகழ்வில் அனைவரும் கலந்துகொள்க!

## சமூக சேவகர் தாமோதரம் பிரதீபன்




(பாறுக் ஷிஹான்)

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு வார நிகழ்வுகளில் அம்பாறை மாவட்டத்தில் அனைவரும் தயக்கமின்றிக் கலந்துகொள்ளலாம் என சமூக சேவகர் தாமோதரம் பிரதீபன் குறிப்பிட்டார்.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு கல்முனையில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், அம்பாறை மாவட்ட சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் மே 18 தமிழர் இனவழிப்பு நாளான முள்ளிவாய்க்கால் தினத்தினை அனுஷ்டிப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

அதனடிப்படையில் எதிர்வரும் மே 16 மற்றும் 17ஆம் திகதிகளில் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு பகுதியிலுள்ள பிரதான வீதிகளில் இந்நிகழ்வுகளை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். இந்நிகழ்வுகள் யாவும் இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்கள் அனுபவித்த துயரங்கள், படுகொலைகள், அந்த நேரம் உணவுக்காக அவர்கள் பட்ட கஷ்டங்கள், அவர்கள் உணவாக உட்கொண்ட அரிசியையும் நீரையும் கலந்து அவித்து பருகிய கஞ்சி உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளையும் மேற்படி கூறிய தினங்களில் காட்சிப்படுத்தவும் வழங்கவும் காத்திருக்கின்றோம்.

இதன் நோக்கமானது கடந்த யுத்தத்தின்போது எமது மக்கள் அனுபவித்த வேதனைகளை தற்போதைய சந்ததிகள் அறியவே இச்செயற்பாட்டை முன்னெடுக்கின்றோம். எனவே, அம்பாறை மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் பொதுமக்களும் இணைந்து மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு வார நிகழ்வுகளில் சிறப்பிக்கவும் உறவுகளுக்காக பிரார்த்தனை செய்யவும் அன்புரிமையோடு அழைப்பதுடன் அனைத்துப் பாதுகாப்பு அனுமதிகளையும் பெற்று ஒழுங்கு செய்துள்ளதால் உறவுகள் அனைத்தும் தயக்கமின்றி இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

இச்செய்தியாளர் சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான என்.தர்சினி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளுக்கான கருத்தரங்கு

## பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பங்கேற்பு





இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளுக்கான விசேட கருத்தரங்கு பங்காளதேஷின் டக்கா நகரில் இடம்பெற்றது.

இந்தியா பவுண்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கருத்தரங்கில் மேற்படி அமைப்பினது விசேட அழைப்பின் பேரில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கலந்து கொண்டார்.

மேற்படி கருத்தரங்கில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், இந்திய உயர் அதிகாரி ராம் ஆதவ் மற்றும் பல நாடுகளின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்தும் அவற்றுக்கான தீர்வுத்திட்டங்கள் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

மேலும் மேற்படி கலந்துரையாடலில் இந்து சமுத்திரப் பிராந்திய விடயங்களில் தமிழர்களின் எதிர்காலப் பங்களிப்புக்கள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் விரிவாகக் கலந்துரையாடியிருந்தார்.

அத்துடன் இலங்கையைப் பொறுத்தளவில் வடக்குக் கிழக்குக் கரையோரப் பிரதேசங்களில் வாழும் அதிகளவான ஈழத்தமிழர்களின் பங்களிப்புத் தொடர்பிலும் குறித்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலையில் நினைவேந்தல் நிகழ்வு





முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் நான்காம் நாள் நினைவேந்தல் நிகழ்வு யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுத்தூபியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போது மாணவர்கள் உயிர்நீத்த உறவுகளுக்கு ஈகைச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தினர்.

# வைத்தியர் சிவகுமாரன் தலைசிறந்த வைத்தியர்களை உருவாக்கியவர்

## யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி



வைத்தியர் சிவகுமாரன்

வைத்தியர் சிவகுமாரன் தலைசிறந்த பல வைத்தியர்களை உருவாக்கியவர் என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்திய சாலையின் பிரபல வைத்தியர் சிவகுமாரனின் மறைவு குறித்து அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது;-

யாழ். போதனா வைத்தியசாலையில் சிக்கலான காலப் பகுதியில் சிறப்பாகக் கடமையாற்றிய வைத்திய நிபுணரின் மறைவு வைத்தியத்துறைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். வைத்தியர் சிவகுமாரன் பல தலைசிறந்த வைத்தியர்களை உருவாக்கியவர்.

மருத்துவபீட மாணவர்களால் 'கடவுள்' என செல்லமாக அழைக் கப்பட்டவர். கடமை, ஒழுக்கம் என பல சீரிய பண்புகளை கற்பித்தவர். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆன்ம ஈடேற்றத்துக் காகவும் பிரார்த்திக்கிறேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிள் விபத்து இளைஞரொருவர் உயிரிழப்பு

வவுனியா - மன்னார் வீதியில் வேப்பங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற மோட்டர் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் இருந்து வவுனியா நகரை நோக்கிச்சென்ற மோட்டார் சைக்கிள் வேப்பங்குளம் பகுதியில் நாய் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தில் மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த தனுஜன் (வயது 20) என்ற இளைஞனே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# 40 வருடங்களுக்கு பின்னர் யாழிலிருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு கொடிச்சீலை





வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை, உபயகாரர்களுக்கான களாஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று (15) இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து திருநெல்வேலி வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் உள்ள சிவபெருமானுக்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி எடுத்துச் செல்லப்பட்டு திருநெல்வேலி கென்னடி வீதியில் உள்ள சண்முகநாதன் கபிலன் குடும்பத்தினிடம் கையளிக்கப்பட்டு பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருக்கேதீஸ்வர ஆலய பிரதம சிவாச்சாரியார் மற்றும் ஆலய திருப்பணிச் சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் பங்குபற்றி யிருந்தனர்.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

1982ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத் திலிருந்தே திருக்கேதீஸ்வரத்துக்கு கொடிச்சீலை வழங்கப்பட்டநிலையில், போர்க் காலத்தில் அந்த முறை கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த வருடம் திருக்கேதீஸ்வரத் தில் கும்பாபிஷேகம் நடைபெற்ற நிலையில் 40 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கப்படவுள்ளது.

# நவாலியில் நினைவேந்தல்



நவாலி சென் பீற்றர் தேவாலயத்தில் உள்ள நினைவேந்தல் தூபியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று இடம்பெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களால் இந்த நினைவேந்தல் நிகர்;வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சுடரேற்றி, மலர்தூவி, அக வணக்கத்துடன், உயிர்நீத்த இன்னுயிர் களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

# கண்டி மாநகரில் ஊடகக் கருத்தரங்கு

எதிர்வரும் ஜூன் மாத நடுப் பகுதியில் இளம் எழுத்தாளர்களுக்கான முழுநாள் பயிற்சிக் கருத்தரங்கொன்றை கண்டியில் நடத்துவதற்கு அகில இலங்கை இளம் எழுத்தாளர் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்தக் கருத்தரங்கு சம்மேளனத்தின் தேசியத் தலைவர் தேவஹேவ நிஜாமுதீன் தலைமையில் இடம்பெறும்.

கவிதை, கட்டுரை, சிறுகதை மற்றும் சமூக வலைத்தளங்கள் முதலானவற்றைப் பயன்படுத்துவது எவ்வாறு போன்ற விடயங்களை உள்ளடக்கிய இந்தக் கருத்தரங்கில் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங் களைச் சேர்ந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் பங்கு பற்ற முடியும்.

இதில் பங்குபற்றும் மாணவ மாணவிகளுக்கு உணவு மற்றும் காகிதாதிகள் வழங்கப்படுவதுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும் .

பங்குபற்ற விரும்புவோர், அகில இலங்கை இளம் எழுத்தாளர் சம்மேளன தேசிய அமைப்பாளர் ரஷீத் எம். றியாழ் - 077 77 9 88 98 என்ற இலக்கத்துக்கு வட்ஸ்அப் மூலம் தகவல் களை அனுப்ப முடியுமென்று சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் மௌலவி ஐ.ஏ. காதிர் கான் தெரிவித்துள்ளார்.

# வாகரையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி





காரைநகர், வலந்தலை முத்துமாரியம்மன் ஆலய முன்றிலில் நேற்று திங்கட்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் கொன்று குவிக்கப்பட்ட உறவுகளின் நினைவாக ஆலய முன்றலில் ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் காரை நகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் பாலச்சந்திரன், உப தவிசாளர்,சிவில் அமைப்பின் பிரதிநிதி கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# திவ்விய ஒளி கலை மன்றத்தின் வருடாந்த “முப்பெரும் விழா”









(உடப்பு செய்தியாளர்)

உடப்பு திவ்விய ஒளி கலை மன்றம் நடத்திய வருடாந்த “முப்பெரும் விழா” உடப்பு திறந்த கலையரங்கில் நேற்று முன்தினம் (14) இடம்பெற்றது. திவ்விய ஒளி கலை மன்றத்தின் தலைவர் பா.முருகானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மரபிசைப் பாடகர்கள், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்கள், சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், ஐந்தாம் தரத்தில் சித்தி பெற்ற மாணவர்கள் எனப் பலர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் உடப்பு திரௌபதையம்மன் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள், ஆண்டிமுனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு சிவநேசக்குருக்கள், இந்து ஆலய பரிபாலன சபையின் தலைவர், செயலாளர், ஆராச்சிக்கட்டு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் க.தெட்சணாமூர்த்தி, உடப்பு பொலிஸ் அதிகாரி, பாடசாலை அதிபர்கள், பொது மக்கள் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர்.

# வவுனியாவில் சடலம் மீட்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா நகர மத்தியிலுள்ள வர்த்தக நிலையம் முன்பாக நேற்றுமுன்தினம் (15) அதிகாலை சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தக நிலையம் முன்பாக எவ்வித அசைவுகளுமின்றி ஒருவர் உறங்கிய நிலையில் காணப்படுவதாக பொதுமகனொருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவர் உயிரிழந்திருப்பதை உறுதிப்படுத்தினர்.

உயிரிழந்த நிலையில் காணப்பட்டவர் யாசகத்தில் ஈடுபடுபவராக இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.05.14
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5114
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,039,049.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 1 3 7 8 5 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3356
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,034,701.04
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 20 30 42 59

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1569
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,939,077.60
வெற்றி இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 8 9 6 1 4 8

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1144
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 89,870,963.20
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 09 37 49 64

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 423
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,732,861.80
வெற்றி இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 02 07 08 38 விசேட இலக்கினம் சிம்மம்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1462
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 320,832,338.00
ஆங்கில எழுத்து U சுப்பர் இலக்கம் 21 வெற்றி இலக்கங்கள் 06 09 11 19
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# யாழில். சிறுவர்களையும் உள்ளடக்கிய வன்முறைக் கும்பல் - இருவர் கைது

யாழ்ப்பாணத்தில் வட்ஸ் அப் குரூப் ஊடாக ஒன்றிணைந்திருந்த வன்முறைக் கும்பல்களைச் சேர்ந்த இருவர் யாழ்ப்பாண பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 15 வயது சிறுவர்கள் முதல் 23 வயது இளைஞர்கள் வரையிலான சுமார் 20க்கும் மேற்பட்டோர் ஒன்றிணைந்து வன்முறைக் கும்பல் ஒன்றாகத் தம்மை சமூக ஊடகங்களூடாக அடையாளப்படுத்தி வந்துள்ளனர்.

குறிப்பாக டிஃடோக் செயலியில் வாளுகள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடனும் நவீன ரக மோட்டார் சைக்கிள்களுடனும் வீடியோக்கள், படங்கள் என்பவற்றைப் பதிவேற்றி யாழில் இயங்கும் மற்றைய வன்முறைக் கும்பல்களைச் சேர்ந்தவர்களுக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் காணொளிகளை பதிவேற்றி வந்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரசியத் தகவலுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்து காணொளிகளில் உள்ளவர்களை அடையாளம் கண்டுள்ளனர்.

அவர்களைக் கைதுசெய்தவற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்த வேளை ஞாயிற்றுக்கிழமை அரியாலை பூம்புகார் பகுதியில் மறைந்திருந்த இருவரை கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், தமது குழுவைச் சேர்ந்தவர்கள் வட்ஸ் அப் குரூப் ஊடாகவே தொடர்புகளைப் பேணுவதாகவும், தாம் இதுவரையில் எந்த வன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபடவில்லையெனவும் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய தாம் கல்வியைத் தொடர முடியாது, வேலைகளுக்கும் செல்லாது வீட்டில் தங்கி வாழ்கிறோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த கும்பலுடன் தொடர்புடைய 20க்கும் மேற்பட்டவர்களை தாம் அடையாளம் கண்டுகொண்டுள்ளதாகவும் அவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, யாழில் இயங்கும் வன்முறைக் கும்பல்கள், வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றி வருவதனால் அவற்றைப் பார்க்கும் வெளிநாட்டிலுள்ள நபர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுடன் ஏற்படும் முரண்பாடுகளுக்கு இந்தக் குழுக்களை கூலிக்கு அமர்த்தி வன்முறைகளில் ஈடுபடுத்துவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# குமுதினி படுகொலை நினைவேந்தல்



குமுதினி படுகொலையின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவில் இடம்பெற்றது.

குமுதினி படகில் படுகொலை செய்யப்பட்ட 36 பேரின் நினைவாக நெடுந்தீவு இறங்குதுறையிலுள்ள நினைவாலய வளாகத்தில் நினைவேந்தல் இடம்பெற்றது.

காலை 8.15 மணிக்கு நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள புனித சவேரியார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி திருப்பலியும், சமநேரத்தில் மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள வீரபத்திர பிள்ளையார் ஆலயத்தில் ஆத்மா சாந்தி வேண்டி சிறப்பு பூஜையும் இடம் பெற்றது.

இதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு குமுதினி படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நினைவுத் தூபிக்கான நினைவுச் சுடர் ஏற்றல் மற்றும் மலர் அஞ்சலி செலுத்துதல் ஆகிய நிகழ்வுகளுடன் பசுந்தீவு ருத்திரனின் 'குருதியின் குமுறல்கள்' என்ற கவிதை நூலும் வெளியிடப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்குகின்ற நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் நெடுந்தீவு பகுதி மதத்தலைவர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

1985ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து 64 பயணிகளுடன் பயணித்த குமுதினி படகை இலங்கை கடற்படையினர் நடுக்கடலில் வழிமறித்து குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என 36 பேரை வெட்டி படுகொலை செய்யதனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வவுனியா ஆலயத்தில் நடராஜர் சிலையை திருடிய இராணுவச் சிப்பாய் கைது

வவுனியா ஆலயமொன்றில் நடராஜர் சிலையை திருடியதாகக் கூறப்படும் இராணுவச் சிப்பாய் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக வவுனியா தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் அக்கராயன்குளம் இராணுவ முகாமில் கடமையாற்றும் 21 வயதுடைய இராணுவச் சிப்பாய் ஆவார்.

சந்தேகநபர் கோயிலில் இருந்த விக்கிரகத்தை திருடி பையில் வைத்து விற்பனை செய்ய முயற்சித்தபோதே வவுனியா வாகனத் தரிப்பிடத்தில் வைத்து சாரதிகள் குழுவினால் பிடிக்கப்பட்டு வவுனியா தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிலையின் மதிப்பு 55,000 ரூபா என கோவிலின் பூசாரி பொலிஸாரிடம் கூறியதாகக் கூறப்படுகிறது.



**மனித படுகொலை இடம்பெற்ற யாழ். குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு தின அஞ்சலி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் நடத்தப்பட்டது. இதன்போது சுடரேற்றி, மலர்தூவி அக வணக்கத்துடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.**

# காங்கேசன்துறையில் இரும்பு திருடியோர் கைது



காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த ஐவர் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையினுள் நுழைந்து அங்கிருக்கும் இரும்பு பாகங்களைத் திருடிச் செல்ல முற்பட்டவேளை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அவர்களுக்கு உடந்தையாக இருந்த காவலாளிகள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரும்பை ஏற்றிச் செல்வதற்கு முற்பட்ட வாகனமும் இதன்போது பறிமுதல் செய்யப்பட்டது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட எட்டுப்பேரும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் சான்றுப் பொருட்களுடன் பாரப்படுத்தப்பட்டனர்.

அவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**காரைக்கால் அம்மையார் குருபூஜையை முன்னிட்டு 14.05.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் சிறுப்பிட்டி நாகதம்பிரான் ஆலயத்தில் செ. த. குமரனினால் வினாடி வினா போட்டி நடத்தப்பட்டது.**

# மாத்தளை ஆமினா மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக பவாயிதா நியமனம்

*(மாத்தளை நிருபர்)*



மாத்தளை ஆமினா மகளிர் தேசிய கல்லூரியின் பழைய மாணவியான ஜே.எஸ்.எம்.பவாயிதா மேற்படி கல்லூரியின் புதிய அதிபராக பதவியேற்றுள்ளார்.

இவர் மாத்தளை கலேவல அல்புர்கான் மத்திய கல்லூரி, கந்தேனுவர தமிழ் வித்தியாலயம், உக்குவெல, குரிவெல ஹமீதியா கல்லூரி மாத்தளை இஸ்மாலியா முஸ்லிம் வித்தியாலயம், மாத்தளை ஆமினா மகளிர் தேசிய கல்லூரி ஆகியவற்றில் 33 வருட காலம் ஆசிரியர் பணிபுரிந்து வந்த இவர் ஆமினா மகளிர் கல்லூரியில் உதவி அதிபராகவும் பிரதி அதிபராகவும் பணிபுரிந்துள்ளார்.

இவர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் வணிக முகாமைத்துவமானி பட்டம் பெற்றுள்ளதோடு, திறந்த பல்கலைக்கழகத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியரும் கொழும்பு பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமாதாரியுமாவார்.

# திருட வந்தவருக்கு பாடம் புகட்டிய எருமை மாடு

## நாவலப்பிட்டியில் சம்பவம்

*(கலஹா செய்தியாளர்)*

நாவலப்பிட்டி பிரதேசத்தில் ஆடு, மாடுகளை திருடிவந்த குழு ஒன்றை நாவலப்பிட்டி பொலிஸார் கைதுசெய்து நேற்று முன்தினம் (14) நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்ற நீதவான் நிலந்த விமலரட்ணவின் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியபோது சந்தேகநபர்களை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

நாவலப்பிட்டி அலுத்கம பிரதேசத்தில் வயல் உழுதுவிட்டு இரண்டு எருமை மாடுகளை அதன் உரிமையாளர் அந்த வயல் பிரதேசத்திலேயே கட்டிப்போட்டுவிட்டு சென்றுள்ளார். இந்நிலையில் சனிக்கிழமை (13) இரவு குறித்த திருடர் குழுவினர் மாட்டை கொன்று இறைச்சியாக்க முயன்றுள்ளனர்.

உயிரைக் காப்பாற்றிக்கொள்ள மாடு திருடர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டது. திருடர் குழுவைச் சேர்ந்த ஒருவருக்கு மாட்டின் கூரிய கொம்பு குத்தியதில் பாரிய காயம் ஏற்பட்டதையடுத்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது காயங்களுடன் தப்பிச்சென்ற திருடன் தனியார் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளார். இவ்விடயம் நாவலப்பிட்டி பொலிஸாருக்கு தெரியவந்ததையடுத்து, ஐந்து பேரடங்கிய குழுவைச் சேர்ந்த மூவரை கைதுசெய்துள்ளதோடு அறுக்கப்பட்ட நிலையில் எருமை மாடு, ஆட்டின் பகுதிகளையும் கடத்தலுக்கு பயன்படுத்திவந்த முச்சக்கரவண்டியையும் கைப்பற்றியுள்ளனர்.

# கம்பளை யுவதி கொலை வழக்கு; சந்தேக நபருக்கு 25 வரை விளக்கமறியல்

*(கண்டி நிருபர்)*

கம்பளை, கெலிஓயா பிரதேசத்தில் காணாமல்போயிருந்த நிலையில் 6 நாட்களின் பின் சடலமாக மீட்கப்பட்ட யுவதியின் கொலை தொடர்பான சந்தேகநபருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கம்பளை, கெலிஓயா, நிவ் எல்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதி பாத்திமா முனவ்வர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 24 வயதுடைய சந்தேகநபர் எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதேபகுதியில் வசிக்கும் ஒரு பிள்ளையின் தந்தை என அடையாளம் காணப்பட்ட சந்தேகநபர் கம்பளை நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் ஞாயிற்றுக்கிழமை (14) பிற்பகல் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை (மே 12) கைதுசெய்யப்பட்ட நிலையில், இக்கொலையை தான் செய்ததை ஒப்புக்கொண்டுள்ளார். யுவதியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாகவும் அவர் தனது முயற்சிக்கு இணங்காததால் யுவதியை புதருள்ள வனப்பகுதிக்கு இழுத்துச்சென்று பின்னர் கொலைசெய்து உடலை புதைத்ததாகவும் ஒப்புக்கொண்டார்.

22 வயதுடைய யுவதி இந்தச் சம்பவத்தை வெளியே கூறுவதை தடுக்கவே கழுத்தை நெரித்துவிட்டு பின்னர் யுவதியின் குடையைப் பயன்படுத்தி மூச்சுத்திணற வைத்து மரணத்தை ஏற்படுத்தியதாகவும் சநதேக நபர் பொலிஸாரிம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

பிரேத பரிசோதனை அறிக்கையில் பாத்திமா மூச்சுத்திணறலால் இறந்துள்ளார் என்றும் அவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# ஹாலி-எலயில் பாவனைக்கு உதவாத 300 கிலோ கிராம் கருவாடு மீட்பு!

*(பதுளை நிருபர்)*



மனிதப் பாவனைக்கு உதவாத பழுதடைந்த 300 கிலோகிராம் கருவாடும் கருவாட்டு விற்பனைக்காக கொண்டு சென்ற லொறி ஒன்றினையும் கைப்பற்றியுள்ளதாக ஹாலி-எல சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

ஹாலி-எல நகர் பகுதி மற்றும் சந்தைகளில் பாவனைக்கு உதவாத கருவாட்டை விற்பனை செய்வதாக சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து உடன் குறித்த களஞ்சியசாலையை பரிசோதித்த சுகாதார அதிகாரிகள் பாவனைக்கு உதவாத 300 கிலோ கிராமிற்கும் அதிகமான கருவாட்டை மீட்டுள்ளனர்.

குறித்த வியாபாரியான சந்தேகநபரை இன்று (16) பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளதுடன் குறித்த களஞ்சியசாலை சுகாதார அதிகாரிகளினால் மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கை ஹாலி-எல சுகாதார வைத்திய அதிகாரிகள் ஆர்.எம்.பீ.பீ.விஜேசோம மற்றும் பிரசாத் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஹட்டன் காபெகஸ் தமிழ் வித்தியாலய அதிபரை இடமாற்றக் கோரி ஆர்ப்பாட்டம்



*(மஸ்கெலியா நிருபர்)*

காபெகஸ் தமிழ் வித்தியாலய அதிபரை உடன் இடமாற்றம் செய்யவேண்டுமென 350க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் இணைந்து பாடசாலைக்கு முன்பாக நேற்று (15) காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து பெற்றோர் கருத்து தெரிவிக்கையில், தற்போதுள்ள அதிபர் மாணவர்களிடம் முறையாக நடந்துகொள்ளவில்லையெனவும் மாணவர்களைத் தாக்குவதாகவும் கல்வி சார்ந்த விடயங்களில் கவனம் செலுத்தவில்லையெனவும் இவ்வாறான அதிபர் மூலம் மாணவர்களின் எதிர்காலம் முறையாக அமையாது எனவும் தெரிவித்தனர்.

# யானை தாக்குதலில் யுவதி உயிரிழந்த விவகாரம்; சுற்றுலா வழிகாட்டிகள் இருவருக்கு விளக்கமறியல்

*(பதுளை நிருபர்)*

கொஸ்லந்த உட தியலும பிரதேசத்தில் இளம் காதலர்களுக்கு அனுமதியின்றி இரவைக் கழிக்க இடம் வழங்கிய சுற்றுலா வழிகாட்டிகள் இருவரை இம்மாதம் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க பண்டாரவளை நீதவான் திருமதி. கே.ஜீவராணி உத்தரவிட்டுள்ளார்.

ஹப்புத்தளை மற்றும் பூனாகலை பிரதேசங்களைச் சேர்ந்த 24 மற்றும் 33 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பற்ற குறித்த பகுதியில் காதலர்கள் இருவர் கூடாரமிட்டுத் தங்கிய பொழுது காட்டு யானையின் தாக்குதலுக்கு இருவரும் இலக்காகியுள்ளதுடன் 23 வயதுடைய பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சம்பவத்தில் உயிரிழந்த பெண் தனியார் வைத்தியசாலை ஒன்றில் தாதியாக பயிற்சி பெற்று வந்த மாத்தறை கேகனதுர பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

குறித்த பெண்ணின் காதலன் (22) விபத்தில் காயமடைந்து தற்போது தியத்தலாவை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

அனுமதிப்பத்திரமின்றி சுற்றுலா வழிகாட்டிகளாகப் பணியாற்றிய இருவரை கொஸ்லந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து பண்டாரவளை நீதவான் நீதிமன்றில் கடந்த 13 ஆம் திகதிஆஜர்ப்படுத்தினர்.

# முச்சக்கர வண்டிகளை இலத்திரனியலுக்கு மாற்றும் வேலைத் திட்டம் ஆரம்பம்



(அஷ்ரப்.ஏ சமத்)

5000 முச்சக்கர வண்டிகளை - 5 வருடங்களுக்குள் மின் இலத்திரனியல் பாவனைக்கு மாற்றும் திட்டம் பிலியந்தலையில் உள்ள இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கைக்கு நிலைபேறுமிக்கதும் நெகிழ்ச்சியானதுமான எதிர்காலத்துக்காக ஏனைய உலக நாடுகளைப் போல இலங்கையும் பசுமையானதும் தூய்மையானதுமான அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. நாட்டில் நிலவும் சமூக, பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் நிலைபேறுமிக்க இயக்க அணுகுமுறைகளைப் பின்பற்றுவதற்கு தம்மை மாற்றிக்கொள்வதற்கே பசுமை மீட்பு செயற்பாடு அடையாளம் காணப்பட்டது. இலங்கைக்குள் குறைந்தளவு கார்பன் வெளியீடு அவைகளுடன் உள்ளடக்கு தன்மை மற்றும் சமத்துவமான அபிவிருத்திக்கான பாதை சீராக்கப்பட்டு அவற்றை மேம்படுத்துவதற்கான ஒரு வழிமுறை பெற்றோல் முச்சக்கர வண்டிகளை மின்சார முச்சக்கர வண்டிகளாக மாற்றுவதற்கு உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டமானது முன்னோடி கட்டம், செயல்விளக்க கட்டம் மற்றும் வரைவுபடுத்தப்பட்ட கட்டம் என மூன்று கட்டங்களைக் கொண்டுள்ளது.

இதில் முதலாவது திட்டத்தை இச் சேவைக்கு மாற்றுவதை பரிசோதித்துப் பார்க்கும் செயல்மிக்க கட்டமானது மாற்றத்துக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தி மாற்றத்துக்கு அவசியமான சந்தை சக்திகளைப் பயன்படுத்தும். இத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதற் கட்டமாக மேல் மாகாணத்தில் புறக்கோட்டை, மாகும்புர, கொட்டாவைப் பிரதேசத்தில் 200 முச்சக்கர வண்டிகள் மின்சார இயக்கத்துகது மாற்றப்படவுள்ளன. இத் திட்டத்துக்கு இலங்கை அரசுக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நிதியுதவி வழங்கியுள்ளது.

இவ்வியக்கத்தில் மாற்றிய பின்னர் முச்சக்கர வண்டிகளின் கட்டணங்கள் முற்றிலும் குறைக்கப்படும்.10 வருடங்களுக்குட்பட்ட உற்பத்தி முச்சக்கர வண்டியாக இருத்தல் வேண்டும். 4 ஸ்ரோக் கியர் கொண்டதாகவும் தமது குடும்பத்தின் வருமானத்துக்காக முச்சக்கர வண்டியை தொழிலாகக் கொண்டவராக வும் இருத்தல் வேண்டும். ஊன முற்றோர் பெண்கள் முச்சக்கரவண்டி உரிமையளராக இருப்பின் அவ்வாறானவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.இதனுடாக உள்நாட்டு பொருளாதாரத்துக்கு மிக அவசியமான பணத்தை சேர்ப்பதற்காக சிறியளவிலான முறைசாரத்துறை பொருளாதார செயற்படுத்தலை மறுமலர்ச்சிக்கு வித்திடவே ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் இதனை இலங்கைக்கு உதவித் திட்டமாக செயற்படுத்துவதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா தெரிவித்தார்.

# மேல் மாகாண நகர அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை உப குழு

## ஜனாதிபதி தெரிவிப்பு











மேல்மாகாண அபிவிருத்தி தொடர்பான சுபானா ஜூரோங்(Surbana Jurong) திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிப்பதாகவும் அதனை முன்னெடுப்பதற்கு புதிய நிறுவனமொன்றை ஸ்தாபிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்துக்கு சுமார் 50 சதவீத பங்களிப்பை வழங்கும் மேல்மாகாணத்தை முறையான நகர அபிவிருத்தித் திட்டத்தினூடாக விரிவான அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்திய ஜனாதிபதி, முறைசாரா நகர அபிவிருத்தி பிற்காலத்தில் கட்டுப்படுத்த முடியாத நிலைமையாக மாறும் எனவும் சுட்டிக்காட்டினார்.

மேல் மாகாண நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் 14ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்துக்கான அபிவிருத்தித் திட்டத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மேல்மாகாண அபிவிருத்தி தொடர்பான முதலாவது திட்டத்தை 1997ஆம் ஆண்டு அமைச்சர் இந்திக குணவர்த்தன முன்வைத்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அதன் பின்னர் சிங்கப்பூரின் சுபானா ஜூரோங் (Surbana Jurong) நிறுவனம் 2004ஆம் ஆண்டு முன்வைத்த திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்த நிறுவனத்தினால் குறித்த திட்டம் மீண்டும் மறுசீரமைத்து வழங்கப்பட்டதுடன் இத்திட்டம் தொடர்பில் அனைவருடனும் கலந்துரையாடி தேவைப்பட்டால் கூடுதல் மறுசீரமைப்புகளுடன் மேல் மாகாணத்துக்கு தேவையான அடிப்படை அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் உடனடித் தீர்மானங்களை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.அத்துடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக மேல் மாகாணத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதான அபிவிருத்தித் திட்டமும் ஜனாதிபதியிடம் இங்கு கையளிக்கப்பட்டது.

இந்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு அவசியமான காணி விடுவிப்பு மற்றும் காணி சுவீகரிப்பு தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அந்தப் பணிகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, பிரசன்ன ரணதுங்க, பந்துல குணவர்தன, விஜயதாச ராஜபக்ஷ, நளின் பெர்னாண்டோ, பாராளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உட்பட அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# யாழ். கல்வி வலயத்தில் தனியார் கல்வி நிலைய வினாத்தாள்

## விசாரணை நடத்தப்படும் என்கிறார் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்



யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆங்கில மொழி மூலம் விஞ்ஞான பரீட்சையில் தனியார் கல்வி நிலையத்தில் வழங்கப்பட்ட வினாத்தாள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்அருளம்பலம் உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில மொழி மூலம் விஞ்ஞானப் பரீட்சை இடம்பெற்றது.

குறித்த பரீட்சையில் வழங்கப்பட்ட வினாத்தாள் ஏற்கனவே தனியார் கல்வி நிலையம் ஒன்றினால் வழங்கப்பட்ட பரீட்சை வினாத்தாள் என்பது தெரியவந்தது.

இதனடிப்படையில் ஊடகங்களில் வெளிவந்த செய்தி தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சு கவனம் செலுத்திய நிலையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# போராட்டங்களை அனுமதிக்க முடியாது

## அரசை கவிழ்க்கும் உரிமை யாருக்குமில்லை என்கிறார் அமைச்சர் பிரசன்ன



போராட்டங்களால் மீண்டும் நாட்டைச் சீர்குலைக்க இடமளிக்க முடியாது. அரசாங்கத்தை கவிழ்க்க மக்களுக்கு உரிமை உண்டு. ஆனால், அரசை கவிழ்ப்பதற்கான உரிமை யாருக்கும் இல்லை. அதுவொரு பயங்கரவாத செயலாகுமென்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடனான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் (15) காணி அபிவிருத்தி கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

அரச நிறுவனங்கள் சுதந்திரமாக செயற்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

இன்று அரச நிறுவனங்களில் நடக்கக்கூடாதவைகள் நடக்கின்றன. அவை முடிந்தவரை குறைக்கப்படவேண்டும். பொறுப்பை இன்னொருவர் மீது சுமத்துவது பொருத்தமில்லாத விடயமாகும்.

புதிய வழியில் சிந்தித்து, புதிய வழியில் செயற்பட்டால், எங்களால் நீண்ட பயணம் செல்ல முடியும். நாட்டின் தற்போதைய நிலை குறித்து என்னை விட அரசாங்க அதிகாரிகளாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். பாரம்பரிய நிறுவனமாக முன்னேறாமல் புதிய வழியில் சிந்தித்து வருமானத்தை ஈட்ட வேண்டும்.

அந்தப் பயணத்தில், நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் வேலையைப் பாதுகாப்பதுதான் முதல் விடயம். அதுதான் இப்போது நமக்கு இருக்கும் மிகப்பெரிய சவால். எனக்கு கீழ் உள்ள பல அரச நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. நிறுவனத் தலைவர்கள் தங்கள் சொந்த வருமானத்தை உருவாக்குவதன் மூலமே நிறுவன ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான பொறுப்பு உள்ளது. சிறிது காலம் கழித்து இது சாதாரணமாகிவிடும். இது சவாலான காலமாகும்.

நிறுவனத்திற்கு வரும் மக்கள் நடத்தப்படும் விதம் குறித்து எங்களுக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரும்போது அவர்களை அடி பணிந்து வரவேற்பார்கள். ஆனால், நம் நாட்டில் ஒரு முதலீட்டாளர் ஏதாவது செய்யப் போகும் போது அதற்கு உதவுவதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. இலங்கையில் இருந்தாலும் சரி, வெளிநாட்டில் இருந்தாலும் சரி வரும் முதலீட்டாளர் ஒன்றே. இலங்கைக்கு நல்லது நடக்குமாயின் அந்த முதலீட்டை நாம் செய்ய வேண்டும். இதுபோன்ற இடங்களிலிருந்து வேலை செய்யாதபோது அந்த நபர்கள் என்னிடம் வருகிறார்கள்.மக்களுக்கு தங்கள் அரசியல் கருத்தை மதிக்கலாம். ஒரு நாட்டை அழிப்பதற்கு கேவலமானவர்களை அனுமதிக்க முடியாது. அரசாங்கங்களை கவிழ்க்கலாம். அது மக்களின் உரிமையாகும். ஆனால் அரசைக் கவிழ்க்க முயல்வது பயங்கரவாத செயல் என்று அர்த்தம் என்றார் .

இந்நிகழ்வில், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாரச்சி, காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரான் பாலசூரிய, அதன் பொது முகாமையாளர் திருமதி சேனாதீர மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (15.05.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 202.7007 | 214.7941 |
| கனேடியன் டொலர் | 224.3066 | 237.6026 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 43.2002 | 46.5358 |
| யூரோ | 331.3943 | 349.2974 |
| ஜப்பான் யென் | 2.2441 | 2.3642 |
| சிங்கப்பூர் டொலர் | 227.5605 | 240.5247 |
| ஸ்ரேலிங் பவுன் | 380.5457 | 400.1409 |
| சுவிஸ் பிராங் | 338.3544 | 359.4456 |
| ஐ.அ. டொலர் | 306.1892 | 319.9619 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 830.8346 |
| குவைட் | குவைட் தினார் | 1,020.8421 |
| ஓமான் | ஓமான் றியால் | 813.5822 |
| கட்டார் | கட்டார் றியால் | 85.9384 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 83.5243 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 85.3042 |

# தெஹிவளை - அல் ஜாமிஅதுல் கௌஸிய்யாஹ்வில் முப்பெரும் விழா

















(அஷ்ரப் ஏ. சமத்)

தெஹிவளை - அல் ஜாமிஅதுல் கௌஸிய்யாஹ் அரபு பயிற்சிக் கல்லூரி மற்றும் இஸ்லாமிய நூலகத்தின் வெள்ளி விழா, 11 ஆவது பட்டமளிப்பு விழா மற்றும் 18 ஆவது தலைப்பாகை சூட்டு விழா ஆகிய முப்பெரும் விழா (13) சனிக்கிழமை அல் ஜாமிஅதுல் கௌஸிய்யாஹ் அரபுக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக அஸ்ஸெய்யித் நகீப் மௌலானா, அஸ்ஸெய்யித் நஜீப் மௌலானா,கௌரவ அதிதிகளாக அல் ஜாமிஅதுல் கௌஸிய்யாஹ் தலைவர் எம்.எச். ஹாஜா ஹுஸைன், இந்தியா கேரலா அஸ்ஸெய்யித் ஏ.ஐ. அனீஸ் பூக்கோயாத் தங்கள், அஸ்ஸெய்யித் ஏ.ஐ. உவைஸ் பூக்கோயாத் தங்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தியா - தமிழ்நாடு ஜாமிஆ அல் அன்வாருல் குத்ஸிய்யா அரபுக் கல்லூரியின் துணை முதல்வர் மௌலவி அஃப்ழலுல் உலமா ஜே.எம். ஜைனுல் ஆபிதீன் (மஹ்ழரி) இதன்போது சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக ஸாதாத்துமார்கள், கௌஸிய்யாஹ் கல்லூரி நிர்வாகிகள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், முரீதீன்கள், முஹிப்பீன்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது (2019) ஆலிம்கள் 6 பேரும் (2021) ஆலிம்கள் 15 பேரும் (2022) ஆலிம்கள் 16 பேரும் (2020) ஹாஃபிழ்கள் 4 பேரும் (2021) ஹாஃபிழ்கள் 6 பேரும் (2022) ஹாஃபிழ்கள் 11 பேரும் மௌலவி மற்றும் ஹாஃபிழ் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். ஆறு மாணவர்கள் தலைப்பாகை சூடி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குறித்த இளம் ஆலிம்களும் ஹாஃபிழ்களும் கல்லூரி அதிபர் அல் ஹாஃபிழ் மௌலவி எம்.எஸ். ரிப்பத் அஹ்மத் - பீ.ஏ., (பாஸில் - ஸகாபி) உப அதிபர் மௌலவி எம். ஆர்.எம். முஹம்மத் றிழ்வான் (கௌஸி), ஹிஃப்ழ் பிரிவுப் பொறுப்பாளர் - அல் ஹாஃபிழ் மௌலவி எஸ். முஹம்மத் அக்பர் (கௌஸி), ஹிஃப்ழ் பிரிவு - அல் ஹாஃபிழ் மௌலவி ஜே.எம். தானிஷ் (கௌஸி) உள்ளிட்ட கல்லூரி போதனாசிரியர்களினால் வாழ்த்தி மகிழ்விக்கப்பட்டமை விசேட அம்சமாகும். இதன்போது அலிப் எனும் 25ஆவது ஆண்டு விழா மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# தாய்லாந்து பௌத்த தேரர்களின் பாதயாத்திரை திருமலையிலிருந்து கண்டி நோக்கி ஆரம்பம்





(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலையில் இருந்து கண்டி நோக்கிய தாய்லாந்து பௌத்த பிக்குகளின் பாத யாத்திரை (உபசம்பதா) ஆரம்ப நிகழ்வு திங்கட்கிழமை (15) ஆரம்பமானது. இதில் 50க்கும் மேற்பட்ட தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் பங்கேற்றனர்.

திருகோணமலை - கண்டி பிரதான வீதி ஊடாக பலத்த பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் மக்கள் விருந்துபசாரம் வழங்கி உற்சாக வரவேற்பளித்தனர். இதன்போது தம்பலகாமம் பிரதேச செயலகம் ஊடாகவும் அவர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

தாய்லாந்து உபசம்பதா நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு 270 வருட பூர்த்தியை முன்னிட்டு இந் நிகழ்வு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, திருகோணமலையில் இருந்து பிரதான வீதி ஊடாக கண்டியை நோக்கி இப் பாத யாத்திரை 10 நாட்களுக்கு இடம்பெறவுள்ளது.

## சமாதான நீதவான்



(மீராவோடை செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவானாக ஓட்டமாவடி - மீராவோடையைச் சேர்ந்த ஏ.ஜீ.றபீக் வாழைச்சேனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.எம்.றிஸ்வி முன்னிலையில் செவ்வாய்க்கிழமை(09) சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஓட்டமாவடியைச் சேர்ந்த அப்துல் கபூர் - றஹ்மத்துமா தம்பதியின் மகனான இவர், ஓட்டமாவடி தேசிய பாடசாலையின் பழைய மாணவராவார். சமூக செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்ட இவர் ஓட்டமாவடி பிரதேச சபையில் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



திருகோணமலை பொது வைத்தியசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் அலுவலகத்துக்கு உதவும் கரங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மின் விசிறி வெள்ளிக்கிழமை(12) வைத்தியசாலை அத்தியட்சகரிடம் கையளிக்கப்பட்டது. இதில் அமைப்பின் ஆலோசகர் எம்.ஜே.ஜவ்பர் ஹசன், வைத்தியசாலை அத்தியட்சகர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (கந்தளாய் செய்தியாளர்)



சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாளரும் சட்டம் ஒழுங்குகள் அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளரும் முன்னாள் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினருமான ஓய்வுபெற்ற ஏ.எல்.எம்.சலீமின் சேவைகளைப் பாராட்டி யூ.எஸ்.எப். அமைப்பால் நினைவுச் சின்னம் வழங்கி ஞாயிற்றுக்கிழமை(14) கௌரவிக்கப்பட்டார். இதன்போது அமைப்பின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டிருந்தனர். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வார நான்காவது நாள் அனுஷ்டிப்பு





(வாழைச்சேனை செய்தியாளர்)

முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரத்தின் நான்காவது நாள் அனுஷ்டிப்பு தமிழர் தாயக மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் கொக்குவில் படுகொலை நினைவுத் தூபியில் திங்கட்கிழமை(15) முன்னெடுக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் சிவில் அமைப்புகளின் ஏற்பாட்டில் மேற்படி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வி.லவக்குமார் தலைமையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இறுதி யுத்தத்தில் உயிர்நீத்த மக்களின் அவலத்தை வெளிப்படுத்தும் முகமாக மேற்கொள்ளப்படுகின்ற இச்செயற்றிட்டமான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட நினைவுத் தூபிகள் அமைந்துள்ள இடங்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 'அபகஸ்' போட்டியில் முதலிடம் பெற்ற மாணவி ஸைனப் தூபா



(எஸ்.அஷ்ரப்கான், மருதமுனை செய்தியாளர்)

சர்வதேச ரீதியான நியமங்களுக்கமைய நடைபெற்ற 'அபகஸ்' கணிதப்போட்டியில் முதலிடம் பெற்று ஜப்பான் நாட்டுக்கு செல்லும் தகுதியினை நற்பிட்டிமுனையைச் சேர்ந்த மாணவி ஆர்.ஸைனப் தூபா பெற்றுள்ளார்.

கிராமத்துக்கும் தான் கற்ற பாடசாலைக்கும் கீர்த்தியினைப் பெற்றுக்கொடுத்த மாணவியினை வீடு தேடிச் சென்று கௌரவிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை(12) நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் ஏ.எம்.பைசால் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக சிரேஷ்ட தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், நற்பிட்டிமுனை வலய உதவி முகாமையாளர் யூ.எல்.தௌபீக், வங்கி உதவி முகாமையாளர் ஐ.றோசினி, வங்கி மற்றும் வலய உத்தியோகத்தர்களும் மாணவியின் பெற்றோர்களும் உறவினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.



சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கி சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக இறக்காமத்தைச் சேர்ந்த ஏ.எல்.யூ. ஜுனைதா கடந்த ஆறு வருடங்களாக கடமையாற்றி இறக்காமம் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச்செல்வதையிட்டு பிரியாவிடை நிகழ்வு சமுர்த்தி வங்கி சங்க கூட்ட மண்டபத்தில் வெள்ளிக்கிழமை(12) இடம்பெற்றது. இதன்போது சாய்ந்தமருது பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிக்கா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

(மாளிகைக்காடு செய்தியாளர்)

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



மண்முனை தென் எருவில்பற்று மக்களால் களுவாஞ்சிக்குடி பொதுச் சந்தை முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரித்து பொதுமக்களுக்கு வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை(15) இடம்பெற்றது. இதன்போது அங்கிருந்த மக்கள் விருப்புடன் கலந்து கொண்டு முள்ளிவாய்க்கால் கஞ்சியை அருந்தினர். (மட்டக்களப்பு செய்தியாளர்)

# காத்தான்குடி மத்திய கல்லூரிக்கு உள்ளக ஒலிக்கட்டமைப்பு கையளிப்பு



(காத்தான்குடி செய்தியாளர்)

காத்தான்குடி மத்திய கல்லூரியின் Back to School நிகழ்வின் எதிரொலியாக பழைய மாணவர்களால் பாடசாலைக்கு பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், 2005ஆம் ஆண்டு சாதாரணதர மற்றும் 2008ஆம் ஆண்டு உயர்தர பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்பில் பாடசாலைக்கு ரூபா ஒரு மில்லியன் பெறுமதியான பாடசாலை முழுவதுமான உள்ளக ஒலிக்கட்டமைப்பு (Sound system) மிகச் சிறந்த தொழில்நுட்பங்கள் கொண்டதாக அமைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை (14) பாடசாலைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.



பாடசாலை அதிபர் எம்.ஏ.நிஹால் அஹமட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச கல்விப் பணிப்பாளர் எம்.எம்.கலாவுதீன், முன்னாள் அதிபர் எம்.சீ.எம்.ஏ.சத்தார், பாடசாலை முன்னாள் ஆசிரியர்கள், பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை







(மாளிகைக்காடு செய்தியாளர்)

தன்னம்பிக்கையுள்ள இளைஞர், யுவதிகளை உருவாக்கல் எனும் தொனிப்பொருளில் H&D தாதியர் பாடசாலை ஏறாவூர் கிளை தாதிய பயிற்சி பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறை வாழைச்சேனை தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை(14) இடம்பெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பின் தலைவர் எஸ்.ஏ.முகம்மட் அஸ்லத்தின் வழிகாட்டலில் அமைப்பின் ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை பிராந்திய அமைப்பாளர் இஸட்.எப். சிஹானி, இஸட்.எப்.சிமானி ஆகியோரின் ஏற்பாட்டில் ஏறாவூர் கிளை முகாமையாளர் எம்.யூ.எப்.றுஸ்னாவின் ஒருங்கிணைப்பில் தேசிய இளைஞர் படையணி வாழைச்சேனை பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி லெப்டினன் கேர்ணல் எம்.எச்.எம்.ரவூப் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பயிற்றுவிப்பாளர் மேஜர் கே.எம்.தமீமினால் விரிவுரைகளும் பயிற்சிகளும் பலகளச் செயற்பாடுகளும் வழங்கப்பட்ட அதேவேளை, அன்றையதினம் மாலை இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில், நிலைய பொறுப்பதிகாரி லெப்டினன் கேர்ணல் எம்.எச்.எம்.ரவூபினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.





சர்வதேச அன்னையர் தினத்தை முன்னிட்டு காத்தான்குடி தள வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் குருதிப் பற்றாக்குறையை கவனத்திற்கொண்டு காத்தான்குடி முகநூல் வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரத்ததான முகாம் ஞாயிற்றுக்கிழமை (14) காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது. காலை முதல் மதியம் வரை இடம்பெற்ற இவ் இரத்ததான முகாமில் நூற்றுக்கும் அதிகமான குருதி கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கி மனிதநேயமிக்க செயற்பாட்டில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (காத்தான்குடி செய்தியாளர்)



மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தியடைந்த 64 மாணவர்களுக்கு மட்டக்களப்பு நகர மக்கள் வங்கியின் நிதிப்பங்களிப்பின் மூலம் பதக்கம் அணிவித்து பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் இராசதுரை பாஸ்கர் தலைமையில் வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு நகர மக்கள் வங்கியின் முகாமையாளர் என்.தினேஸ்குமார், உதவி முகாமையாளர் திருமதி.சுதர்ஷினி செந்தூரன், ஆசிரியர்களான எஸ்.சிற்சபேசன், வை.துவாரகன், திருமதி தர்ஷினி ஜெயந்திரன், திருமதி ஸ்ரீதாரணி நகுலராஜ், வங்கி உதவிச்செயலாளர் வீ.சிவம், வங்கி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (வெல்லாவெளி செய்தியாளர்)

# அட்டாளைச்சேனையில் இடம்பெற்ற நடமாடும் சேவை



(திராய்க்கேணி செய்தியாளர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் ஏற்பாடு செய்திருந்த நடமாடும் சேவை அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமது ஷாபிர் தலைமையில் திங்கட்கிழமை(15) இடம்பெற்றது.

இதன்போது திணைக்களத் தலைவர்கள், கிராம சேவகர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டதோடு அத்தியாவசிய அரசாங்க நிறுவனங்களும் கலந்து கொண்டு தங்கள் சேவைகளையும் தேவைப்பாடுடையோருக்கான தீர்வுகளையும் வழங்கின. இதில் விசேடமாக காணி தொடர்பான தீர்க்கப்படாத பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், டெங்கு ஒழிப்பு விசேட நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி, ஆலம்குளம், அஷ்ரப் நகர், சம்பு நகர், தைக்கா நகர் மற்றும் தீகவாபி போன்ற கிராம மக்களின் தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு இந்நடமாடும் சேவையில் தீர்வுகள் வழங்கப்பட்டதாக உதவி பிரதேச செயலாளர் எப்.நகிஜா முசாபீர் தெரிவித்தார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் முழுதாக கைவிடப்பட வேண்டும்

## கிழக்கு முஸ்லிம் சிவில் அமைப்புகள் பிரகடனம் நிறைவேற்றம்



*(மாளிகைக்காடு செய்தியாளர்)*

புதிதாக உத்தேசிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் முற்றுமுழுதாக கைவிடப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கிழக்கு மாகாண முஸ்லிம் பொது அமைப்புகள் மற்றும் பொது நிறுவனங்கள் கூட்டாக இணைந்து பிரகடனமொன்றை ஞாயிற்றுக்கிழமை(14) நிறைவேற்றின.

பயங்கரவாத தடைச்சட்டம் என்றால் அது சிறுபான்மை மக்களை இலக்கு வைத்து கொண்டுவரப்படும் சட்டமென்பது எல்லோருக்கும் தெரியும். அரசாங்கம் எந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தாலும் முழுமையாக பிரயோகிப்பது சிறுபான்மை மக்கள் மீதே என கிழக்கின் கேடயம் தலைவரும் அக்கரைப்பற்று ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவருமான எஸ்.எம்.சபீஸ் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

மேலும், காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் பொது நிறுவனங்களின் சம்மேளனம் ஒழுங்கமைத்த, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் கிழக்கு மாகாண முஸ்லிம் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கான விழிப்பூட்டல் கலந்துரையாடல் காத்தான்குடியில் இடம்பெற்றபோது நாட்டின் ஜனநாயகத்தையும் மக்களின் மனித உரிமையையும் கேள்விக்குட்படுத்தும் பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக இரத்துச்செய்யப்படவேண்டுமென்றும் அதன்போது முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கைவிடப்பட வேண்டுமென்றும் ஏகமனதாக பிரகடனம் செய்யப்பட்டது.

பயங்கரவாத சட்டங்கள் பெரும்பான்மை மக்களை பாதித்ததை விட பலமடங்கு சக்திவாய்ந்ததாக சிறுபான்மை மக்கள் மீதே கடந்த காலங்களில் பாய்ந்துள்ளது. இப்போது அரசின் போக்கை கண்டிப்பவர்கள், அரகல செய்பவர்கள், உரிமைகோரி போராடுபவர்களை அடக்கவும் இந்தச் சட்டத்தைப் பிரயோகிக்கிறார்கள். இதனால் பெரும்பான்மை மக்களும் இச் சட்டங்களுக்கு எதிராக போர்க்கொடி தூக்கும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் முஸ்லிம்களின் காணிகள் 15 ஆயிரம் ஏக்கருக்கு மேல் தமிழ் மக்களினால் அபகரிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு முறையான தீர்வை வழங்கவேண்டியது அரசியல் தலைவர்களின் கடமை. அரசியல் தலைமைகளே இனவாதத்தை தூண்டுகின்றன. தேவையில்லாத சட்டமூலங்களை கொண்டுவருகின்றன. மக்களை குழப்புகின்றன. இவற்றையெல்லாம் கைவிட்டு மக்களை நிம்மதியாக வாழச்செய்ய தலைவர்கள் முன்வரவேண்டும். சிறுபான்மை மக்களுக்கு மட்டுமன்றி, இலங்கையில் வாழும் எல்லா மக்களுக்கும் ஆபத்தான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை அரசாங்கமும் ஜனாதிபதியும் கைவிட வேண்டும்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல சிவில் சமூகமும் இந்த விடயத்தில் ஒருமித்த கருத்தில் உள்ளது. கடந்த காலங்களில் இந்தச் சட்டம் சிறுபான்மை சமூகத்தை கடுமையாக தாக்கியுள்ளது என்றும் இதனால் எமது நாட்டுக்கு பொருத்தமற்ற இந்தச் சட்டமூலம் உடனடியாக கைவிடப்பட வேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கோருகின்றோம் என்றார். இதன்போது சிரேஷ்ட சட்டத்தரணி ருஸ்தி ஹபீப், சட்டத்தரணிகளான ஸ்வஸ்திகா அருணலிங்கம், ரணிதா மயூரன் ஆகியோர் இந்தச் சட்டமூலத்தைப் பற்றி விளக்கமளித்த அதேவேளை, சிரேஷ்ட உலமாக்கள் உள்ளிட்ட பள்ளிவாசல்கள், பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மின்சாரம் வழங்குமாறு கோரி ஒல்லிக்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்





*(காத்தான்குடி செய்தியாளர்)*

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தினால் ஒல்லிக்குளம் பகுதியில் காணிகள் வழங்கப்பட்டு குடியேறிய 48 குடும்பங்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாமையை கண்டித்து காத்தான்குடி மின்சார சபைக்கு முன்னால் பாதிக்கப்பட்ட மக்கள் திங்கட்கிழமை(15) ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஒல்லிக்குளம் குடியேற்ற கிராம மக்கள் அக்காணியில் இருப்பிடங்களை அமைத்து ஒருவருடத்துக்கும் மேலாக வாழ்ந்துவரும் நிலையில், மின்சாரத்துக்காக விண்ணப்பித்து ஒன்பது மாதங்கள் கடந்த போதிலும் இதுவரை மின்சாரம் வழங்குவதற்கான எந்தவொரு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லையெனவும் மின்சாரம் வழங்கும் விடயத்தில் தமக்கு பாரபட்சம் காட்டப்படுவதாகவும் தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இது விடயத்தில் மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் என்.கே.றம்ழான் கருத்து தெரிவிக்கையில், காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்துக்கு சொந்தமான 48 காணிகள், வீடு மற்றும் காணிகள் இல்லாத வறுமையில் உள்ள 48 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. இதேவேளை, 32 குடும்பங்களே அக்காணிகளில் குடியேறி தற்போது வசித்துவருகின்றன.

இக்காணிகளைப் பெற்றுக்கொண்ட மக்கள் அக்காணிக்குள் இருப்பிடங்களை அமைத்து சுமார் ஒருவருடகாலமாக வாழ்ந்து வருகின்றனர். வயோதிபர்கள், சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் வசிக்கும் குறித்த இடத்தில் மின்சார வசதிகள் இல்லாது அம்மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன்னர் மின்சாரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்திருந்தும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இது தொடர்பில் காத்தான்குடி பிரதேச மின் அத்தியட்சகர் கனகசபை சிவேந்திரனிடம் கேட்டபோது, அதற்கான உபகரணங்கள் இல்லை, மின்கம்பங்கள் இல்லை, மின்மானி இல்லை என்று இழுத்தடிப்புச் செய்கின்றார். தற்போது இறுதியாக நிலத்தில் தண்ணீர் இருப்பதால் வேலை செய்யமுடியாது என்றும் காரணங்களைத் தெரிவித்து வருகிறார். மேலும் மண்முனைப்பற்று பிரதேச செயலாளரிடம் மின்சாரம் வழங்குவதற்கு அனுமதிக்கடிதம் பெற்றுவரும்படியும் மக்களிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது குறித்த கிராமத்துக்கு மின்னிணைப்பை ஏற்படுத்துவதற்கு சுமார் 20 இலட்சம் ரூபா வரை செலவாகும் என்றும் இதற்கான நிதி இலங்கை மின்சார சபையிடம் இல்லையென்றும் நிதி கிடைத்தவுடன் குறித்த பணியை நிறைவு செய்யலாமென்றும் சொல்கிறார். ஓர் அரச அதிகாரியின் இவ்வாறான இரட்டை வேடம் போடும் செயல் கண்டிக்கத்தக்கது. அரசாங்க அதிகாரிகள் மக்களுக்கு பணியாற்றுபவர்கள் என்பதை உணர்ந்து சேவையாற்ற வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கடலுக்கு குளிக்கச்சென்ற மாணவன் சடலமாக மீட்பு

*(மட்டக்களப்பு செய்தியாளர்)*

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு கடலிலிருந்து பாடசாலை மாணவன் ஒருவரின் சடலம் திங்கட்கிழமை(15) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெரியகல்லாறு கடலில் ஞாயிற்றுக்கிழமை(14) மாலை 3 இளைஞர்கள் நீராடிக்கொண்டிருந்துள்ளனர். அதில் ஒருவரை கடலலை இழுத்துச் சென்ற நிலையில் ஏனைய இருவரும் தெய்வாதீனமாக உயிர்த் தப்பியுள்ளனர். எனினும் கடலில் மூழ்கடிக்கப்பட்டவரை ஞாயிற்றுக்கிழமை இரவு வரையில் தேடியும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் திங்கட்கிழமை காலை குறித்த பாடசாலை மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் பெரியகல்லாறு முதலாம் பிரிவின் பொற்கொல்லர் வீதியைச் சேர்ந்த 17 வயதுடைய பாலச்சந்திரன் லெசான் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்டவர் பெரியகல்லாற்றில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயின்ற மாணவர் எனவும், அவர் இவ்வருடம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்தவர் எனவும் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த களுவாஞ்சிக்குடி பொலிஸார் சடலத்தைப் பார்வையிட்டு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



**மட்டக்களப்பு- காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூநொச்சிமுனை மற்றும் காத்தான்குடி ஏத்துக்கால் பரப்பில் ஞாயிற்றுக்கிழமை(14) நள்ளிரவு ஏற்பட்ட பாரிய கடலலையினால் மீன்பிடிப் படகுகள் உடைந்து சேதமடைந்துள்ளதாக கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். கடலலைகள் பாரியளவில் எழும்பிய நிலையிலேயே குறித்த படகுகள் உடைந்து சேதமடைந்துள்ளன. இதனால் இப்பகுதி மீனவர்களுக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது. (மட்டக்களப்பு செய்தியாளர்)**





**திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் - சேனையூர் பிள்ளையார் ஆலய வளாகத்தில், மே18 முள்ளிவாய்க்கால் சம்பவத்தின் நினைவையொட்டி முள்ளிவாய்க்கால் கஞ்சி செய்யப்பட்டு திங்கட்கிழமை(15) பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இந்நிகழ்வை சேனையூர் பிரதேச மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது முள்ளிவாய்க்கால் சம்பவத்தில் உயிர்நீத்த உறவுகளுக்காக தீபமேற்றப்பட்டு மௌனப் பிரார்த்தனையும் இடம்பெற்றது. (மூதூர் செய்தியாளர்)**

# போதைப்பொருளுடன் ஒருவர் கைது

*(கனகராசா சரவணன்)*

மட்டக்களப்பு ஏறாவூரில் முச்சக்கரவண்டி ஒன்றில் ஐஸ் போதைப்பொருளை வியாபாரத்துக்காக கடத்திச் சென்ற பிரபல வியாபாரி ஒருவரை ஞாயிற்றுக்கிழமை (14) கைதுசெய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய ஏறாவூர் பெரும் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் சம்பவதினம் இரவு 8.30 மணியளவில் நீதிமன்ற வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது குறித்த முச்சக்கரவண்டியை நிறுத்தி சோதனையிட்டபோதே அதில் 5 கிராம் ஐஸ் போதைப்பொருள் இருந்துள்ளது.

குறித்த சந்தேக நபரை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் நீண்ட காலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் இவர் ஈடுபட்டுவருபவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# துவிச்சக்கரவண்டி திருட்டில் ஈடுபட்ட இளைஞன் கைது

*(பாறுக் ஷிஹான்)*

நீண்டகாலமாக துவிச்சக்கரவண்டி திருட்டில் ஈடுபட்டு வந்த சந்தேக நபரான இளைஞர் ஒருவரை நிந்தவூர் பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை(14) மாலை கைதுசெய்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் தரித்து வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டிகள் திருடிச்செல்லப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள் நிந்தவூர் பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்றிருந்தன.

இதனையடுத்து, விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றையடுத்து விசாரணை மேற்கொண்ட பொலிஸ் குழு இவ்வாறு காணாமல்போன துவிச்சக்கரவண்டிகளை மீட்டுள்ளதுடன் சந்தேக நபர் மற்றும் திருடப்பட்ட துவிச்சக்கரவண்டிகளை கொள்வனவு செய்தவர்களையும் கைது செய்துள்ளது.

இந்நடவடிக்கையை நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம்.நஜீம் தலைமையிலான சிறு குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான குணரட்ன, விசேட புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர், குழுவினர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கைதான 24 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் உட்பட திருடப்பட்ட துவிச்சக்கரவண்டிகளை கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபர்களையும் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நிந்தவூர் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## போடியார் புலம்பல்!



**நாட்டில் சகலரும் ஒன்றிணைந்து ஆட்சியமைத்தாத்தான் நாட்டை முன்னோக்கிச் செல்ல முடியும் என முன்னாள் ஜனாதிபதி ஜோக்கர் மாமா மைத்திரி சொல்லியிருக்காரு. எலுவா? அடே நாசமத்த கத கதையாத நீ.. 2015 இல் நல்லாச்சியில ஜனாதிபதியாக இருந்து ஒன்றிணைந்துதானே ஆட்சியமைத்தாய். ஏன் முன்னோக்கி செல்ல உன்னால முடியல்ல...நீயும் ரணிலும் சேர்ந்து கொஞ்சக்கூத்தா காட்டினீங்க.. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 16, எம்.பிமாரையும் பேய்க்காட்டி 10, ஆக 2020இல் மாற்றினதுதான் ஒண்ட சாதன !**



**ஓட்டமாவடி அறபா நகர் முகைதீன் அப்துல் காதர் வித்தியாலயத்தின் தரம் ஒன்று வகுப்பறைக்கான புதிய அலுமாரி ஒன்றைப் பெற்றுத்தருமாறு பாடசாலை அதிபர் ஏ.யூ.எம்.நளீம் (ஸலாமி)விடுத்த வேண்டுகோளுக்கமைய, ஓட்டமாவடி பழைய மாணவர் அமைப்பினரால் (OCC 92) அலுமாரி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பழைய மாணவர் அமைப்பின் பொருளாளர் பி.எம்.றம்ழான் (கிராம உத்தியோகத்தர்), உப செயலாளர் ஏ.எல்.யூசுப், ஆசிரியர் எம்.எம்.நவாஸ், சமுர்த்தி உத்தியோகத்தர் எம்.இஸ்மாயில், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.நஜீம் ஆகியோர் கலந்து கொண்டனர். (பாண்டிருப்பு செய்தியாளர்)**

# வடக்கு, கிழக்கு பிரச்சினை தொடர்பிலான கலந்துரையாடலுக்கு தமிழ் எம்.பிக்களை மட்டும் அழைத்தமை ஒருதலைபட்சமானது

## ஐக்கிய காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவிப்பு

*(மாளிகைக்காடு செய்தியாளர், எஸ்.அஷ்ரப்கான்)*

வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடனான ஜனாதிபதியின் சந்திப்பு என கூறிக்கொண்டு வடக்கு, கிழக்கின் சிங்கள மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைக்காமல் தமிழ் உறுப்பினர்களை மட்டும் அழைத்த ஜனாதிபதி செயலகத்தின் ஒருதலைபட்சமான செயற்பாட்டை ஐக்கிய காங்கிரஸ் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதுபற்றி ஐக்கிய காங்கிரஸ் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

இந்த நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல் முஸ்லிம்கள் பல இழப்புகளைச் சந்தித்து வந்துள்ளனர். அப்போதெல்லாம் முஸ்லிம்கள் தரப்பில் பேச முஸ்லிம் தனிக்கட்சி இல்லை எனக் கூறப்பட்டதாலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சி ஆரம்பிக்கப்பட்டு அது முஸ்லிம்களை பாராளுமன்றில் பிரதிநிதித்துவப்படுத்தியது.

ஆனாலும் அக்கட்சி முஸ்லிம்களின் உரிமைகளுக்காகப் போராடியதை விட தமது சுக போகங்களுக்கே அதிகம் போராடியது. 2001ஆம் ஆண்டு ஒஸ்லோவில் நடந்த பேச்சுவார்த்தைகளில் அன்று அமைச்சராக இருந்த ரவூப் ஹக்கீம் முஸ்லிம் தரப்பாக கலந்துகொள்ள வேண்டும் என்று நாம் கோரிக்கை விடுத்தோம். ஆனால், அவர் அமைச்சர் என்ற சுகபோகத்தை விரும்பியதால் முஸ்லிம் தனித்தரப்பாக கலந்து கொள்ள மறுத்த துரோகத்தின் காரணமாக இன்றுவரை முஸ்லிம் சமூகத்துக்கு தனித்தரப்பு கிடைக்கவில்லை.

அக்கட்சியின் செயல்களால் விரக்தியுற்றதனாலும் அக்கட்சி தன் நம்பகத்தன்மையை இழந்ததாலும் முஸ்லிம் சமூகத்தில் வேறு கட்சிகளின் தேவை உருவாகியது. ஆனாலும் இவ்வாறு உருவான ஏனைய முஸ்லிம் கட்சிகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கிடைத்தபோதும் அவர்களும் நாட்டில் எதைச் சுருட்டலாம்- யாரை ஏமாற்றலாம் என்றுதான் முயற்சித்தார்களே தவிர, முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை.

இந்நிலையில், நாட்டின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பது பாராட்டுக்குரிய செயலாகும். ஆனாலும் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் எம்.பிக்களை மட்டும் அழைத்து பேசுவதன் மூலம் இம்மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் வேண்டுமென்றே ஒதுக்கப்பட்டனரா என்ற கேள்வியும் எழுகிறது.

புலிகளால் அனைத்து சொத்துகளும் கொள்ளையடிக்கப்பட்டு விரட்டப்பட்ட வடக்கு மாகாண முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் இன்னமும் முறையாக நடக்கவில்லை. மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் காணிகள் மீள கொடுக்கப்படவில்லை. காணாமலாக்கப்பட்ட முஸ்லிம்களுக்கான பதில்கள் கிடைக்கவில்லை. இவ்வாறு தமிழ் மக்கள் போன்று ஒரே பிரச்சினைக்கு வடக்கு, கிழக்கு முஸ்லிம்களும் முகம் கொடுப்பதால் தேர்தல் திணைக்களத்தில் பதிவு பெற்றுள்ள முஸ்லிம் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென ஐக்கிய காங்கிரஸ் கட்சி பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அவை இன்னமும் செயற்படுத்தப்படவில்லை.

ஆகவே, இது விடயத்தில் ஜனாதிபதி செயலகத்தின் ஒருதலைப்பட்சமான செயற்பாட்டை நாம் கண்டிப்பதுடன் உடனடியாக முஸ்லிம் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# மிதக்கும் சூரியசக்தி மின்சாரத் திட்ட நிர்மாணிப்பு குறித்த கலந்துரையாடல்

*(கல்லடி செய்தியாளர்)*



மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மிதக்கும் சூரியசக்தி மின்சாரத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஆலோசனையின் கீழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தலைமையில் வெள்ளிக்கிழமை (12) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இத்திட்டம் குறித்த முன்மொழிவு சோளார் பெட்ரொனேஜ் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தினால் முன்னளிக்கை செய்யப்பட்டு அது தொடர்பான அபிப்பிராயங்களும் முன்வைக்கப்பட்டன.

இதன்போது, இம்மிதக்கும் சூரிய சக்தி மின்சார தகட்டைப் பொருத்துவதற்கு மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவின் சூரிய ஒளி நேரடியாகப் படக்கூடிய கொத்துக்குளம் வாவிப் பகுதி ஏற்ற இடமாக அடையாளம் காணப்பட்டிருப்பதுடன், 0.133546 சதுர கிலோமீற்றரில் நில மற்றும் 0.094 சதுர கிலோ மீற்றர் வாவிப் பகுதியும் இத்திட்டத்துக்குப் பயன்படுத்துதல் தொடர்பான அனுமதியைப் பெறுதல் குறித்து கலந்துரையாடப்பட்டது.

10 மெகா வோட்ஸ் மின்சாரத்தை இதனால் உற்பத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கான காணியை காணி ஆணைக்குழு குத்தகை அடிப்படையில் பெறப்படவுள்ளதுடன் மின்சக்தி அமைச்சின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சனி முகுந்தன், மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் எம்.வாசுதேவன், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலக பிரதிப் பணிப்பாளர் எஸ்.கோகுலன், சிரேஷ்ட சுற்றாடல் அதிகாரி சமீர தர்மராஜ, நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதம பொறியியலாளர் ஆர்.ராஜன், வனஜீவராசிகள், வனப் பாதுகாப்பு மற்றும் மீன்பிடி ஆகிய திணைக்களங்கள், மட்டக்களப்பு மாநகரசபை, மின்சார சபை அதிகாரிகள் மற்றும் பிரதேச மீனவ சங்க அங்கத்தவர்கள் போன்றோர் கலந்துகொண்டனர்.

# துருக்கி ஜனாதிபதித் தேர்தல்: முன்னிலையில் எர்டோகன்



## 20 ஆண்டுகால ஆட்சியை தக்க வைப்பாரா?

துருக்கி ஜனாதிபதித் தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிலையில் தற்போது வாக்கெண்ணும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் தற்போதைய ஜனாதிபதி தய்யீப் எர்டோகனுக்கும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் கெமல் கிளிக்டரோக்லுவுக்கும் (வயது 74) இடையே கடும் போட்டி நிலவுகிறது.

இந்நிலையில் நேற்றைய வாக்கு எண்ணிக்கைகளின்படி, எர்டோகன் 49.6% வாக்குகள் பெற்று முன்னிலையிலுள்ளார். 6 கட்சிகள் சார்பில் ஜனாதிபதி எர்டோகனுக்கு எதிராக போட்டியிடும் கிளிக்டரோக்ல் 44.7% வாக்குகள் பெற்று பின்னடைவைச் சந்தித்துள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளுக்குப் பின்னர் துருக்கியில் நேற்றுமுன்தினம் (மே 15) ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலின் முடிவுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

தய்யீப் எர்டோகன் (வயது 69) கடந்த 2003ஆம் ஆண்டு முதல் துருக்கியை ஆட்சி செய்து வருகிறார். 2003 முதல் 2014 வரை துருக்கியின் பிரதமராக இருந்த அவர், 2014ஆம் ஆண்டு அப்பதவியை கலைத்து நாட்டின் உச்ச அதிகாரமாக ஜனாதிபதி பதவியை கொண்டு வந்தார். அதன் பின்னர் தற்போது வரை துருக்கியின் ஜனாதிபதியாக அந்நாட்டை ஆட்சி செய்து வருகிறார்.

இந்நிலையில், கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி துருக்கி - சிரிய எல்லையில் அடுத்தடுத்து ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் 55ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர். இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்தனர். இந்த நிலநடுக்கத்தின்போது மீட்புப் பணிகளை சரிவர முடுக்கிவிடவில்லை என்று ஜனாதிபதி எர்டோகன் மீது பொதுமக்கள் கடும் அதிருப்தியில் இருந்தனர்.

இன்னொருபுறம், கடந்த 10 ஆண்டுகளில் எப்போதும் இல்லாதளவுக்கு இருக்கும் துருக்கியின் மோசமான பொருளாதாரமும் தேக்கநிலையும் பொதுமக்களுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளன. துருக்கியின் பணவீக்கம் தற்போது 85% அதிகரித்துள்ளது.

ஜனாதிபதி எர்டோகனுக்கு எதிராக ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் ஒன்று திரண்டு துருக்கியின் காந்தி என்று அழைக்கப்படும், குடியரசு மக்கள் கட்சியை சேர்ந்த கெமல் கிளிக்டரோக்லுவை எதிர்க்கட்சி பொது வேட்பாளராக தேர்ந்தெடுத்தனர்.

இந்தச் சூழலில் பெரும் பதற்றத்துக்கிடையே நேற்றுமுன்தினம் (மே 15) துருக்கி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. தற்போது தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வரும் சூழலில் கருத்துக்கணிப்புகள் அனைத்தும் கெமலுக்கு சாதகமாகவே வந்துள்ளன. மேலும் துருக்கியில் 50 இலட்சம் புதிய வாக்காளர்கள் இருப்பதால் அவர்கள் அனைவரும் கெமலுக்கே வாக்களித்துள்ளதாக கூறப்படுகிறது. எனினும் வேட்பாளர்கள் இருவரில் ஒருவர் 50% வாக்குகள் பெறவில்லையெனில், எதிர்வரும் 28ஆம் திகதி துருக்கியில் இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெறவுள்ளது.

**வீட்டில் இருந்தபடியே வாக்களித்த உலகின் மிக அதிக உயரப் பெண்**

இந்நிலையில் துருக்கி ஜனாதிபதி தேர்தலில் உலகின் மிக அதிக உயரமுடைய பெண் வீட்டில் இருந்தபடியே வாக்களித்துள்ளார்.

Rumeysa Gelgi gi என்ற பெயர் கொண்ட 24 வயதுடைய பெண் கடந்த 2021ஆம் ஆண்டில் உலகின் மிக அதிக உயரமான பெண் என்று கின்னஸ் சாதனை படைத்தவர் ஆவார்.

Weaver Syndrome என்ற அரிய வகை மரபணு நோயுடன் பிறந்ததால் அவருக்கு அபார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அவருக்கு நகர்வதில் சிரமம் காரணமாக வாக்குச்சாவடிக்கு செல்ல முடியாத நிலை இருந்தது. இதுபற்றி தகவலறிந்த தேர்தல் ஆணைய அதிகாரிகள் அவரது வீட்டுக்குச் சென்று வாக்களிக்கும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தனர்.



# உலகச் செய்திகள்

## வெள்ளத்தில் தத்தளிக்கும் சோமாலியா

### 22 பேர் உயிரிழப்பு; 4 இலட்சம் பேர் பரிதவிப்பு



சோமாலியாவில் திடீரெனப் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 22 பேர் உயிரிழந்துள்ளதுடன், 4 இலட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் வெள்ளம் பாதித்த பகுதிகளிலிருந்து 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர் என அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

# பங்களாதேஷ் - மியன்மார் இடையே கரையை கடந்த அதிதீவிர மோக்கா புயல்

## 700பேர் படுகாயம்; 5 இலட்சம் பேர் இடம்பெயர்வு

வங்கக் கடலில் உருவான அதி தீவிர புயலான மோக்கா (Mocha) புயல், பங்களாதேஷ் - மியன்மார் இடையே பேரிரைச்சலுடன் கூடிய பலத்த சூறாவளிக் காற்றுடன் கரையை கடந்தது. இதனால் இரு நாடுகளும் பலத்த சேதத்தை எதிர்நோக்கியுள்ளதுடன் 700இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதுடன் சுமார் 5 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

வங்கக் கடலில் உருவான மோக்கா புயல் நேற்றுமுன்தினம் பங்களாதேஷ் - மியன்மார் இடையே கரையை கடந்தது. அப்போது மணிக்கு 200 கி.மீ. வேகத்தில் பலத்த புயல் காற்று வீசியது. இந்த அதிதீவிர புயல் பங்களாதேஷ் -மியன்மார் எல்லையிலுள்ள கடலோரப் பகுதிகளை பந்தாடியது. குறிப்பாக பங்களாதேஷின் காக்ஸ் பஜார் மற்றும் சட்டோகிராம் நகரங்கள் புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டன. காக்ஸ் பஜார் பகுதியிலேயே மியன்மாரிலிருந்து தப்பி வந்த பங்களாதேஷில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்கிய அகதிகள் முகாம்கள் உள்ளன.



புயல் கரையை கடந்தபோது பங்களாதேஷ் மற்றும் மியன்மாரின் கடலோரப் பகுதிகளில் பலத்த காற்றுடன் கனமழை கொட்டித் தீர்த்தது. இதனால் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பங்களாதேஷின் காக்ஸ் பஜார் மற்றும் சட்டோகிராம் நகரங்களிலிருந்து சுமார் 5 இலட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். பலத்த சூறாவளி காற்றால் 700இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அதேபோல் மியான்மாரின் கியெவுக்பியு நகர் உட்பட பல கடலோரப் பகுதிகள் புயலால் கடும் பாதிப்பை சந்தித்தன. அங்கும் புயல், மழை, வெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். தொலைத்தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டன. புயல் கரையைக் கடந்த நிலையில், அங்கு மீட்புப் பணிகளை அங்குள்ள நிர்வாகங்கள் முடுக்கி விட்டுள்ளன.

புயல் காரணமாக பங்களாதேஷ் விமான நிலையங்கள் மூடப்பட்டன. ரோஹிங்கிய அகதிகள் முகாம் அமைந்துள்ள பகுதிகளில் மண்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதாக ஐ.நா. எச்சரித்ததைத் தொடர்ந்து அம்பியூலன்ஸ்களுடன் மருத்துவக் குழுவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு அரசு தெரிவித்தது.

















**தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அதிபர் கிருஸ்ணசாமி தலைமையில் வெள்ளிக்கிழமை(12) பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.**

**இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மத்திய மாகாண கல்விச் செயலாளர் ஜி.எச்.எச்.ஏ.பிரேமசிங்க, நுவரெலியா வலய கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, கல்வி அபிவிருத்தி பணிப்பாளர் கணேஸ்ராஜ், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜெகதீஸ்வரன், பிரதி அதிபர் நிர்மலா, உதவி அதிபர் ஜெகதீஷன் ஆகியோர் கலந்துகொண்டு வெற்றிபெற்ற இல்லங்களுக்கு வெற்றிக் கிண்ணங்களையும் கேடயங்களையும் வழங்கி வைத்தனர்.** (பி.கேதீஷ்)

# உயிருக்கு ஆபத்தான நிலையில் சிம்பாப்வே ஜாம்பவான்



சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் நட்சத்திர முன்னாள் வீரர் ஹெத் ஸ்ட்ரீக் ஆபத்தான கட்டத்தில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தென்னாபிரிக்காவின் ஜோகான்ஸ்பர்க் நகரில் இருக்கும் அவர் புற்றுநோயால் அவதிப்பட்டு ஆபத்தான கட்டத்தில் சிகிச்சை பெற்று வருவதாக சக வீரர் சீன் வில்லியம்ஸ் சோகத்துடன் கூறியுள்ளார்.

கடந்த 1993ஆம் ஆண்டு சிம்பாப்வே அணிக்காக சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான அவர், 2005 வரை 65 டெஸ்ட் மற்றும் 189 ஒருநாள் போட்டிகளில் விளையாடினார். 5000 ஓட்டங்களையும் 455 விக்கெட்களையும் எடுத்து மிகச் சிறந்த ஆல் ரவுண்டராக அசத்திய அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் 100 விக்கெட்டுகள் எடுத்த முதல் சிம்பாப்வே வீரர், ஒருநாள் கிரிக்கெட்டில் 2000 ஓட்டங்கள் மற்றும் 200 விக்கெட்டுகளை எடுத்த முதல் சிம்பாப்வே வீரர் போன்ற நிறைய சாதனைகளையும் படைத்துள்ளார்.

2005 இல் ஓய்வுக்கு பின் பயிற்சியாளராக செயல்பட்டு வந்த அவர் தற்போது 49 வயதை கடந்துள்ள நிலையில் கல்லீரல் புற்றுநோய் காரணமாக வைத்தியசாலையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com




**இன்றைய போட்டி**

**போட்டி இல - 63**
**லக்னோ எதிர் மும்பை**
**நேரம் - இரவு 7.30**
**இடம் - லக்னோ**

# இலங்கை அணியில் இடம்பிடித்த மதீஷ பத்திரன



ஜூன் மாதம் சிம்பாப்வேயில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக்கிண்ண தகுதிகாண் தொடர் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஒருநாள் தொடர் என்பவற்றில் பங்கெடுக்கும் இலங்கை கிரிக்கெட் அணியின் 30 பேர் அடங்கிய ஒருநாள் குழாம் வெளியாகியுள்ளது.

தசுன் ஷானக்க தலைமையிலான குழாத்தில் குசல் மெண்டிஸ் உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மறுமுனையில் ஐ.பி.எல். போட்டிகளில் கலக்கி வரும் மதீஷ பத்திரனவும் குழாத்தில் வாய்ப்பு பெற்றிருக்கின்றனர். இலங்கை - ஆப்கான் அணிகள் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் ஜூன் மாதம் 02ஆம் திகதி ஆரம்பமாகியது.

**இலங்கை குழாம்**

தசுன் ஷானக்க (தலைவர்), குசல் மெண்டிஸ் (உப தலைவர்), குசல் பெரேரா, அஞ்சலோ மெதிவ்ஸ், நுவனிது பெர்னாண்டோ, சரித் அசலன்க, தனஞ்ஜய டி சில்வா, சதீர சமரவிக்ரம, அஷேன் பண்டார, அவிஷ்க பெர்னாண்டோ, லசித் குரூஸ்புள்ளே, சஹான் ஆராச்சிகே, சாமிக கருணாரட்ன, வனிந்து ஹஸரங்க, துஷான் ஹேமந்த, துனித் வெல்லாலகே, லஹிரு குமார, துஷ்மந்த சமீர, டில்ஷான் மதுசங்க, கசுன் ராஜித, மதீஷ பத்திரன, மிலான் ரத்நாயக்க, நுவான் துஷார, பிரமோத் மதுசான், அசித பெர்னாண்டோ, மகீஷ் தீக்ஷன, லக்ஷான் சந்தகன், ரமேஷ் மெண்டிஸ், பிரவீன் ஜயவிக்ரம.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7